Ohm Hindu Spiritual Monthly Magazine
ஓம் இந்து ஆன்மீக மாத இதழ்

ஓம் ஆன்மீக மாதாந்த சஞ்சிகை

OHM Spiritual Magazine

February 2005
இதழ் 1



ஆசிரியத்தலையங்கம்

மனப்பொங்கல் பொங்கி வழியட்டும்

எதனை எழுதுவதாக இருந்தாலும் முதலில் பிள்ளையார் சுழி போட்டுவிட்டு அதன் பின்னர் எழுதுவது வழக்கம். எந்தத் தொழிலை ஆரம்பிப்பதாக இருந்தாலும் அது வெற்றிகரமாக முடிய வேண்டும் என்பதற்காக பிள்ளையாரை வணங்கிய பின்னரே ஆரம்பிக்கப்படுகின்றது. பிள்ளையார் பிரணவ சொரூபம். ஓம் என்ற பிரணவம்தான் சகல ஒலிகளுக்கும் வார்த்தைகளுக்கும் ஜீவாதாரம். ஓம் என்ற சொல்லே சிரு'டியின் ஆதியும் அந்தமும். ஓங்காரமே அணுவுக்கும் நுண்ணியதான அமைப்பின் சுழல் நாதம். அதனால் உலகத்தின் மூலாதார ஒலி. சகலத்தையும் இயக்கும் ஒலி. அந்த ஒலி நின்றிடின் உலக இயக்கம் நின்றுவிடும். எங்கும் சூன்யமாகிவிடும். ஓம் பேரண்ட இயக்க அதிர்வலை என்று குறிப்பிடுகிறார் பரமஹம்ச யோகானந்தர். மேலும் அவர் பிரபஞ்சம் முழுதும் ஒலிக்கும் ஓம் என்ற இந்த நாதம் மூன்று விதமாக அல்லது முக்குணங்களாக படைத்தல், காத்தல், அழித்தல் மூலமாக வெளிப்படுகின்றது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

Ohm or Aum is of paramount importance in Hinduism. This symbol is a sacred syllable representing Brahman, the impersonal Absolute — omnipotent, omnipresent, and the source of all manifest existence. Brahman, in itself, is incomprehensible; so a symbol becomes mandatory to help us realize the Unknowable. Ohm, therefore, represents both the unmanifest and manifest aspects of God. That is why it is called Pranava, to mean that it pervades life and runs through our prana or breath.

ஓம் பிரணவத்தைக் குறிப்பதால் இந்து மதத்தின் பெருமையைப் போற்றுவதற்கு எழுந்த இந்த சஞ்சிகைக்கு அப்பெயரையே நாம் வைத்துள்ளோம். எமது இதழ் சமயமும் சமுதாயமும் கலந்த சிந்தனைகளை முன் வைக்கும் முயற்சியிலேயே நடைபோடும். அதன் சமுதாயக் கடப்பாட்டின் காரணமாகத்தான் பொங்கல் தினத்தில் வெளிவரவிருந்த முதல் இதழ் சுனாமி ஏற்படுத்திய பேரழிவை அடுத்து எழுந்த துன்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சற்று தாமதித்து வருகின்றது. சுனாமி பொங்கல் ஏற்படுத்திய மனித உணர்வுப் பொங்கலை நாம் அவதானித்துப் பாராட்டுகின்றோம். கடல் பூகம்பத்தால் எழுந்த சுனாமியின் தாக்கத்தினால் தொடர்ந்து அல்லலுறும் மக்களுக்கு கனடாவில் வாழும் அனைத்து இனமக்களும் மனம்பொங்கி கசிந்து உருகி தம்மால் இயன்ற தொகைகளையும் வகைகளையும் அள்ளிக் கொடுப்பதை ஓம் இதழ் மனம் கசிந்து வாழ்த்திப் பாராட்டுகின்றது. வணங்குகின்றது.

பல உயிர்களைப் பலிகொடுத்தும், பல உயிர்களின் அல்லல் குறித்தும், பல உயிர்களின் அறியாமை குறித்தும், சில உயிர்களின் ஆணவம் குறித்தும், சில உயிர்களின் அன்பு, பண்பு, இரக்கம் குறித்தும் கற்ற பாடங்களை வைத்துக் கொண்டு இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்பதை இலக்காக வைத்து ஓம் இதழ் மாதந்தோறும் மலர இருக்கிறது. இந்த மலருக்கு மகரந்தம் சேர்க்க வேண்டியது வாசகர்களும் வர்த்தகப் பெருமக்களுமே!

God is love in its purest form
அன்பே சிவம்

Editor and Publisher

Murugesu Shanmuganathan

Published by
OHM Hindu Spiritual Magazine Publications
P.Box 63610
1571 Sandhurst Circle
Scarborough, Ontario
M1V 5K2.

Tel: 416-284-6848
e-mail:
shanmurugesu@yahoo.ca



Paramahansa Yogananda

OM

Whence, whence this soundless roar doth come,
When drowseth matter's dreary drum?
On shores of bliss, Om, booming, breaks!
All earth, all heaven, all body shakes!
Cords bound to flesh are broken all,
Vibrations burst, and meteors fall!
The hustling heart, the boasting breath,
The hustling heart, the boasting breath,
No more shall cause the yogi's death;
All nature lies in darkness soft,
Dimness of starlight seen aloft;
Subconscious dreams have gone to bed...
'Tis then that one doth hear Om's tread;
The bumble-bee now hums along—
Hark! Baby Om doth sing His song!
From Krishna's flute the call is sweet:
'Tis time the Watery God to meet!
Now, the God of Fire is singing!
Om! Om! Om! His harp is ringing.
God of Prana now is sounding—
Wondrous, breathing-bells resounding!
O! Upward climb the living tree;
Hark to the cosmic symphony.
From Om, the soundless roar! From Om
The call for light o'er dark to roam.
From Om the music of the spheres!
From Om the mist of nature's tears!
All things of earth and heaven declare,
Om! Om! Resounding everywhere!

ஓம் எனும் பிரணவ மந்திரம்

ஆண்டவனை காலை நேரப் பிரார்த்தனையில் இருபத்தொரு தடவைகள் ஓம் என்று சொல்லுகிறோம். இதற்கு ஒரு தத்துவ பின்னணி உண்டு.

ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து பிராணன்கள், ஐந்து கோசங்கள், பிரார்த்தனையைக் கூறும் சாதகன்ஆகியவற்றைச் சேர்த்தால் இருபத்து ஒன்றாகின்றது.

இருபத்தொரு தடவை ஓம் என்று சொல்லும்போது இவை அனைத்தும் தூய்மை அடைகின்றன. ஜீவ தத்துவம், பரதத்துவத்துடன் ஒன்றிப் போகிறது. இருபது குதிரைகளை அடக்கி ஓட்டும் ஒரு சாதகனாக மனிதன் உருவெடுக்கிறான்.

மூன்று முறை சாந்தி என்று கூறும்போது பூரணமான அமைதி கிடைக்கின்றது. முதல் முறையில் உடலும், இரண்டாவது முறையில் உள்ளமும், மூன்றாவது முறையில் ஆத்மாவும் தூய்மை அடைகின்றது.

இந்த பிரணவ ஜபம் உடலையும் உள்ளத்தையும் உறுதிப்படுத்தி மனதிற்கு அமைதியை அளித்து அருள் பெறுவதற்கு உதவுகின்றது.

ஓம் என்பது சப்தப் பிரம்மம், அ- உ -அம் ஆகிய மூன்று எழுத்துக்கள் சேர்ந்து ஓம் என்ற சப்தமாக உருவெடுக்கின்றன.

அ என்பது தொண்டையிலிருந்தும், உ என்பது உள் நாக்கிலிருந்தும், அம் என்பது உதலிட்டிலிருந்தும் வெளிப்படுகின்றது.

ஆனால் ஓம் கார சப்தத்தை எழுப்பும்போது அதற்குரிய சக்தி நாபியிலிருந்து எழுந்து வெளிப்படுகிறது.

ஓம் என்பதை மெதுவாகவும், மூச்சை நிறுத்தி மெல்ல மெல்ல விட்டும் உச்சரிக்க வேண்டும். இந்த சப்தம் முதலில் மெதுவாகவும், முடிவில் ஓங்கியும் இருக்க வேண்டும்.

அ என்பது உறுதியான ஆரம்பமாகவும், உ என்பது தீர்க்கமான மத்திபமாகவும், உம் என்பது சிகரமான முடிவாகவும் இருக்க வேண்டும். இப்படி உச்சரிக்கும் ஓம் நமக்குச் சக்தியை அருளவல்லது.

பராசக்தியின் பேரருளைப் பெற தியானிக்கப்படும் ஸ்ரீசக்கரத்தில் ஓம் என்பது மையமாக, நாயகமாக விளங்குகின்றது. அதைச் சுற்றியே மற்ற சக்திப் பரிணாமங்கள் அமைந்துள்ளன.

மனிதன் அதேபோலத் தனது பிரார்த்தனையில் ஓம் என்பதை மையமாக வைத்து அதைச் சுற்றிலும் தனது தியானத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.


மனிதனைக் காப்பாற்றுவது மந்திரம். மனிதனின் மனதில் உறுதியை நிலவச் செய்வது மந்திரம். இந்த மந்திர ஜபத்துக்கு ஆணிவேராக அமைந்திருப்பது பிரணவ மந்திரமான "ஓம்" பிரணவ சாதனையில் மூச்சை இழுப்பதும் வெளியே விடுவதுமான யோகப் பயிற்சியுடன் இது ஒன்றி உடலையும், உள்ளத்தையும் உறுதிப்படுத்துகிறது.

-பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா

God is love in its purest form

அன்பே சிவம்

SWAMI VIVEKANANDA



Swami Vivekananda is the chief among the seventeen Monastic Disciples of Sri Ramakrishna. Before meeting Sri Ramakrishna, he was a true model of the new world of rational thinking and skepticism. He did not believe in God with forms or in images and temples. He never had faith in Scriptures. He did not accept Prophets and Incarnations. He demanded proof for the existence of God. With his super-human intellectual approach, he grilled all the known leaders of religions of his time. None could give a clear answer based on their direct personal experiences.

But, when he challenged Sri Ramakrishna, the response was totally different. Sri Ramakrishna took up the boy's challenges cheerfully! By the miraculous touch of Sri Ramakrishna, the skeptic Narendra was transformed to the Saint Vivekananda. Sri Ramakrishna imparted all the spiritual experiences and made him realize the existence of GOD; God with forms and God without forms.

It was Swami Vivekananda, who introduced Vedanta to the West. He was the most applauded religious leader of the Parliament of Religions held at Chicago in 1893. He established Ramakrishna Mission to spread the message of his Master. After Buddha and Sankara, Swami Vivekananda is considered to be the greatest spiritual leader and Missionary of India, who revived the ancient monasticism among the deserving aspirants. He elevated the status of the service of fellow beings to the level of real worship of God. He inspired the humanity to realize the potential divinity dormant in every individual being.

The way he defined the aim of the religion is an indication of his status as a prophet. This definition of the religions is going to be quoted repeatedly by all religious authorities in future.

"Each soul is potentially divine. The Goal is to manifest this divinity within, by controlling nature, external and internal. Do this either by work, or worship or psychic control, or philosophy- by one, or more, or all of these- and be free. This is the whole of religion. Doctrines, or dogmas, or rituals, or books, or temples, or forms, are but secondary details".

By P.S.KAMANAT

Truth can be stated in a thousand different ways, yet each one can be true. – Swami Vivekananda

தைப்பொங்கல் - கவிநாயகர் வி. கந்தவனம்

தமிழ் மக்களின் வாழ்க்கை முறை இயற்கை அன்னையின் அருள் வழிப்பட்டது. இயற்கையால் முன்னேறிய மனிதன் படிப்படியாக இயற்கைச் சூழலைப் பங்கப்படுத்தி, இன்று மனித வாழ்க்கைக்கே ஊறுவிளைவிக்கும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டதை உணர்ந்து, இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் காண்கின்றோம்.

இந்து சமயம் இயற்கையிற் பிறந்து, இயற்கையைப் போற்றி இயற்கையால் வளர்ந்தோங்கிய சமயம். இயற்கையின் முக்கியத்துவத்தைத் தமிழர்கள் அன்றே உணர்ந்தவர்கள். நெய்தல் நிலத்தின் தெய்வமாக வருண பகவானைப் பழந்தமிழர் வணங்கினர். பாலை நிலத்தவர் கொற்றவையுடன் கதிரவனையும் வழிபட்டனர். சிலப்பதிகாரத்தில் வரும் மங்கல வாழ்த்தில் திங்களும் ஞாயிறும் மாமழையும் போற்றப்படுகின்றன. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தையடுத்து வான் சிறப்பு பற்றி வலியுறுத்துகிறார். இன்றும் பலவகையான இயற்கை வழிபாடுகள் தமிழ் மக்களின் சமய வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கின்றன. இவற்றுள் முக்கியமானது நவக்கிரக வழிபாடு. கிரகங்கள் சூரியனை மையமாகக் கொண்டவை.

சௌரம் என்பது சூரியனை வழிபடும் சமயம். தைப்பொங்கல் இவ்வழிபாட்டுடன் தொடர்புடையது. தமிழ்த் தைப் பிறப்பில் வீட்டு முற்றத்தில் சூரியனுக்குப் பொங்கிப் படைக்கின்றோம். இது குறித்து இரண்டு விடயங்கள் சிந்திக்கத் தக்கன. தை மாதம் முதலாந் திகதி சூரிய வழிபாட்டுக்குரிய நாளானது எங்ஙனம்? இந்த வழிபாட்டில் பொங்கிப் படைக்க வேண்டியதன் நோக்கம் என்ன?

தை முதல் நாள் சூரியன் மகரராசியில் புகும் நாள். இது மகர சங்கராந்தி அல்லது தைச்சங்கராந்தி என்று அழைக்கப்படும். அதாவது, தென்னரைக் கோளத்தில் சஞ்சரித்த சூரியன் வடக்கு நோக்கித் தோன்றும் வகையில் புவியின் சுழற்சி மாற்றம் பெறும் காலத்தில் தை வருகின்றது. வடக்கு நோக்கி வரும் சூரியனை வரவேற்கும் ஒரு வழிபாடாக இது அமைகின்றது.

இந்து சமயக் காலக் கணிப்பில் தை மாதம் உத்தராயண காலத்தின் ஆரம்பம் ஆகும். உத்தராயணம் தேவர்களின் பகற் பொழுதாகையால் தை மாதம் அவர்களது காலைப் பொழுது ஆகின்றது. அதனாலும் தை மாதம் முக்கியத்துவம் பெறுகின்றது. தை மாதமே பண்டைத் தமிழ் மக்களின் வருட முதல் மாதமாக முற்காலத்தில் இருந்ததென்றும் அதனால் தை மாதம் முதலாந் திகதி வருடப் பிறப்பு தினமாகக் கொண்டாடப்பட்டு வந்த தென்றும் காலப் போக்கில் வருடப் பிறப்பு சித்திரைக்கு மாற்றப் பெற்ற பின்னரும் பழைய தைக் கொண்டாட்டத்தை மக்கள் கைவிடாது தொடர்ந்து செய்து வருகின்றனர் என்றும் கருதுவாருளர். பெரும்பாலான சமய விழாக்கள் இந்துக்கள் யாவருக்கும் பொதுவாக அமையத் தைப்பொங்கல் மட்டும் தமிழருக்கேயுரிய தனித்துவமான விழாவாக இருப்பதால், இது மேலும் ஆராயப்பட வேண்டிய முக்கியமான கருத்தாகும். 6.1.2001ல் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் அறிஞர்கள் கூடிய மாநாடு ஒன்றில் தமிழத் தை முதலாந் திகதி தமிழ் மக்களின் வருடப் பிறப்பாகக் கொள்ளப்படவேண்டும் என்ற தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டதையும் இந்த இடத்திலே குறிப்பிடல் வேண்டும்.

மேலும், சிவபெருமானின் நெற்றிக்கண் சூரியனைக் குறிப்பதால், சூரிய பொங்கல் சிவனைக் குறிக்கும் வழிபாடாகவும் கருதப்படுகின்றது. அதன் காரணமாகவும் சிவனைப் போற்றும் தென்னாட்டில் தைப்பொங்கற் கொண்டாட்டம் வளர்ந்தோங்கியிருக்கலாம்.

இவ்விதம் பல காரணங்களை முன்வைக்கலாமெனினும், தைப் பொங்கல் பெரிதும் ஓர் உழவர் விழா என்பது கண்கூடு. மார்கழியும் தையும் முன் பனிக் காலம், வயல்களில் நெல் கதிர்கொள்ளும் காலம்

மறுபக்கம் பார்க்கவும்

விளைச்சல் நன்கு அமைய வேண்டும் என்று சூரியனை வேண்டுவதற்குத் தை முதலாம் நாள் ஒரு பொது நாளாகத் தெரிவு செய்யப் பட்டிருத்தல் வேண் டும். தைப் பொங்கல் அடிப்படையில் ஒரு நன்றிப் பொங்கலாகவும் இருப்பதைக் கவனிக்கலாம். தமிழர் நன் றியைப் பெரிதும் போற்றி வருபவர். தினைத் துணை நன்றி செயினும் அதனைப் பனைத் துணையாகக் கொள்ளும் பண்பினர். தமிழர் பண்பாட்டில் மனிதர் செய்யும் உதவிகளை மறவாது இருத்தலுடன் இயற்கை செய்யும் உதவிகளை மறவாதித்தலும் முக் கியமாகும். இயற்கை இராச்சியத்தின் இணையற்ற வேந் தன் சூரியன். அவன் இன்றி மழையில்லை. மழையின்றி நீரில்லை. நீரின்றி உழவில்லை. உழவின்றி உணவில்லை. உணவின்றி வாழ் க்கை இல்லை. அவன் இன்றி அமையாது உலகம். அதனால் அவனுக்கு நன்றி தெரிவிக்கப்படுகின்றது. சூரியனால் விளைந்த நெல்லை அரிசியாக்கிப் பொங்கிச் சூரியனுக் கே படைப்பது நன்றிமறவாச்செயல்.

தைப் பொங்கல் ஒரு வழிபிறக்கும் விழாவாகவும் அமைகின்றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்னும் வழக்குத் தொடர், வயல் அறுவடைகள் வீடுகளுக்கு வர மக் களின் பொருளாதார நிலை உயரும்என் பதனையே முக்கியமாகக் குறிக்கின்றது.

பொங்கற் கொண்டாட்ட முயற்சி நான்கு நாட்ககளை உள்ளடக்கியது. பொங்கலுக்கு முதல் நாள் வீடு வளவுகள் துப்பரவாக்குதல் ,பொங்கலுக்கு வேண்டிய பொருள்களை ஆயத்தம் செய்தல் முதலியன நடைபெறும்.

பொங்கல் நாளில் வைகறையாமத்தில் இருந் தே இல்லங்கள் குதுாகலிக்கத் தொடங்கி விடும். குளித்து முழுகிப் புத்தாடை தரித்துச் சிவ வழிபாடு செய்வதுடன் கொண்டாட்டம் ஆரம்பமாகும். பெண்கள் முன்றிலைப் பெருக் கி மெழுகிப் பொங்கல் தளம் ஒன்றினைத் தயார் செய்வர். இத்தளம் அழகிய கோலங் களால் வரையறுக்கப் படும், தளத்தின் ஒரு புறத்தில் நீண்ட வாழை இலைகளில் நிறைகுடம் குத்து விளக்குகள் அமைத்தும் பால் பழங்கள் படைத்தும் கற்பூரம் சாம் பிராணிகள் கொளுத்தியும் பொங்கல் இனிதே நடைபெற வேண்டுமென பிள்ளையாரை நினைத்தும் பின்னர் சூரியனை நினைத்தும் வழிபாடு நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து தளத்தின் மையத்தில் புதிய அடுப்பு அமைக் கப்படும். அதில் நீர் நிரப்பப் பெற்ற புதுப் பானை ஒன்றை ஏற்றும் பொறுப்பு ஈழநாட்டில் ஆடவருக்கே உரியது. புதுப்பானை திரிபுண் டர சின்னங்களுடனும் மாவிலை தோரணத் துடனும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். பானை நீரில் பால் கலக்கப்படும். சூரியன் உதிக்கும் நேரக் கணக்கில் பால் பொங்க வேண்டும் என்னும் கருத்துடனேயே ஆயத்தங் கள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். கிழக்கு நோக்கிப் பால் பொங்கி வழியுமாயின் அது சிறந்த சகுனமாகக் கருதப்படும். பால் பொங் கும் நேரத்தில் குடும்பம் முழுவதும் சூழ நின் று சூரியனை நோக்கித் தொழுவர். சிறுவர் சீன வெடிகளைக் கொளுத்தி ஆரவாரிப்பர்.

அடுத்து, வயதில் முதிர்ந்த ஆடவர் பொங்கலுக் கான பச்சை அரிசியில் ஒரு பிடியைக் கிள்ளிப் பொங்கற் பானையை மூன்று முறை சுற்றி எடுத் துப் பானையில் இடுவர். இக் கிரியை மூன்று முறை செய்யப்படுமபாலில் பச்சை அரிசியைப் பாசிப் பயற்றுடன் சமைப்பது வழக்கம். இவை அவிந்து வரும் சமயத்தில் சர்க்கரை, முந் திரிகை வற்றல், முதலிய பொருட்கள் கலந் து பொங்கல் இனிமையாக்கப்படும். பொங்கி முடிந்த பின் வாழை இலையிற் பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து வழிபாடு செய்யப்படும்.

மூன்றாவது நாளில் மாடுகன்றுகள் வைத்திருக் கும் கமக்காரர் மாட்டுப் பொங்கல் பொங்குவர். பழங் காலத்தில் மாடடுப் பண்ணைக்காரர் பெருஞ் செல்வந்தராக விளங்கினர். அதனால் மாடு என் ற சொல் செல்வம் என்ற பொருளைப் பெற நேர் ந்தது. பண்ணை மாடுகள் நோய்நொடி இன்றி இ ருக்கச் சூரியனை வணங்கும் தினமே மாட்டுப் பொ பாங்கலாகும். தமிழ் நாட்டில் இப்பொங்கல் மாட் டுச் சவாரி,டக்குதல் முதலாய விளையாட்டுக் களுடன் சிறப்புறக் கொண்டாடப்படுவது வழக்கம். நான்காம் நாள் உறவினர் தரிசனம், விளையாட்டு நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள் என்பன நடைபெறும். இக்காலத்தில் பல இ டங்களில் தைப் பொங்கல் விழா சுருக்கம் பெற்றுப் பொங்கிப் படைக்கும் முக்கிய நிகழ் ச்சியுடன் அல்லது மாட்டுப் பொங்கலுடன் முடிந்து விடுகின்றது. பொங்கல் அன் றுமாலையே கலை விழாக்களை நடத்தி முடிப் பதுமுண்டு.

தைப் பொங்கல் வீடுகளிலன்றிக் கோயில் களிலும் கொண்டாடப்படும் விழாவாகும். பொங் கல் என்னும் சொல் அருமையானது. சொல் லுகின்ற பொழுதே வாய் இனிக்கும். பொங் கல் பல வகைப்படுமாயினும் தைப் பொங்கற் பண்டிகை தனித்துவம் வாய்ந்தது. உலகத் துக்கு உணவூட்டும் உழவர் விழா ஆதலாலும் தமிழர் வளர்த்த பழம் பெரும் விழாவாதல- ாலும் இன்றும் மற்றைய விழாக்களிலும் பார் க்கத் தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் மிகுந் த உற்சாகத்துடன் கொண்டாடப்படுதலாலும் இது தமிழரின் தலையாய விழாவாகின்றது.

புலம் பெயர்ந்த நாடுகளில் தைப் பொங்கற் பண்டிகையை முறையாகக் கொண்டாடக் கூடிய வாய்ப்புகள் இல்லையாயினும் எமது பாரம் பரியங்களைப் பாதுகாப்பதினாலேயே எமது தனித்துவத்தை நிலைநாட்ட முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். தைப் பொங்கலைக் கொண்டாடுவதற்கு நாம் கமக் காரர்களாகத்தான் இருக்க வேண்டும் என்றில் லை. உலகத்திலுள்ள கமக்காரர்களுக்காக நாம் பொங்கலாம். அவர்களை வாழ்த்தலாம். அவர்களுக்கு உதவும் சூரியனுக்கு அவர்கள் சார்பில் நாம் நன்றி தெரிவிப்பது நமக்கு நன் மையைத் தரும். சூரியன் விவசாயிகளுக்கு மட் டுமன்றி எல்லோருக்கும் உதவுகின்றான். மேலும் , வெளியிடத்திலேதான் பொங்கிப் படைக்க வேண்டும் என்னும் நியதியுமில்லை. சூரியனின் கதிர்கள் எங்குமுள்ளன. வீட்டுக்குள் பொங்கிப் படைத்தும் சூரியனை வழிபடலாம். அபொங்கற் பானை பொங்கும் பொழுது வெறும் பால் மட் டும் பொங்குவதில்லை. பாலுடன் சேர்ந்து நன் றி பொங்குகின்றது. அன்பு பொங்குகின்றது. அறம் பொங்குகின்றது. பொங்கல் விழாவில் உறவு பொங்குகின்றது. ஒற்றுமை பொங்குகின்றது. தியாகமும் உழைப்பும் கலநத மனிதாபிமானம் பொங்குகின்றது. தமிழர் பண் பாடும் கலாசாரமும் சேர்ந்த பாரம்பரியம் பொங்குகின்றது.



Amax Auto™

We care for your car...



AMAX AUTO

We Do

Auto Repairs
Body Works and Painting
Engine Diagnostic
Complete Exhaust & Muffler
Car Interior, Exterior Shampoo
and more..

185 MIDWEST RD,
SCARBOROUGH, ONTARIO
CANADA,

Tel: 416-285-8425
Fax: 416-285-8425

நான் எப்போதும் உங்களோடு தான்

HOMELIFE HIGHER STANDARDS

வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான அடமானக்கடன் தேவைகளுக்கும்

HomeLife/Future Realty Inc.
Realtor Member
262 Markham Road
Scarborough, Ont. MiJ 3C5
C: 416-716-5626
T: 416-264-0101
F: 416-261-1519



Raj Perampalam
Sales Representative

Each Office is independently owned and operated





முதல் வணக்கம்-விநாயகருக்கு

விநாயகர் நல்லறிவைத் தருபவர். வெற்றி பெறச் செய்பவர். தடைகளை நீக்குபவர். அதனால்தான் எந்தச் செயலை மேற்கொண்டாலும் எவ்வித இடர்களும் இல்லாது அது நடைபெற்று முடிய வேண்டும் என்ற எண்ணத்தில் விநாயகரைத் துதிப்பது வழக்கம். கணநாதர், கணபதி, பிள்ளையார், கணேசர் என்றும் அழைக்கப்படும் அவர் யானை முகமும், இடைக்கு மேல் மனித உடலும், அதன் கீழ் பூத உடலும், ஒற்றைக் கொம்பும், நான்கு கைகளும் கொண்டவராக சித்தரிக்கப்படுகிறார். அவர் இப்படிச் சித்தரிக்கப்படுவதன் தத்துவம் தான் என்ன?

விநாயகர் தத்துவம்

பரம் பொருள் ஒன்றே. கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர் என்று கூறுவதற்கு அமைய இறைவனை முற்று முழுதாகக் கண்டவர் எவரும் இல்லை. யானையைக் கண்களினால் பார்க்க முடியாத குருடர்கள் தாங்கள் தடவிப் பார்த்த அதன் உடற்பாகங்களின் அமைப்பை வைத்தே யானை எப்படி இருக்கும் என்று வர்ணித்த கதை யாவரும் அறிந்ததே. அதுபோன்று இறைவனை தங்கள் மனக்கண்ணில் பார்த்த ரிீகள் சாதரண மனிதனும் அவரது இயல்பை விளங்கிக் கொள்வதற்காக பலவிதமாக உருவகப்படுத்தினார்கள். அதில் ஒன்றே விநாயகர். விநாயகரது உருவத்தை நாம் பார்க்கும் போது அவர் மனிதர் இல்லை என்பது புலனாகின்றது. பூத கணங்களுக்கு இருப்பது போன்ற கால்கள் இருக்கின்றன. அவர் பூத கணங்களின் தலைவர். அதனால் தான் கணபதி, கணநாதர் என்றெல்லலாம் அவர் அழைக்கப்படுகிறார். இருந்த போதிலும் அவர் பூதகணமா என்றால் அதுவும் இல்லை. யானைத் தலை இருப்பதால் அவர் பிராணியா, அ.்றிணையா என்றால் அதுவுமில்லை. ஆனால் அவரை உயர்திணை என்றும் சொல்லிவிடமுடியாது. அப்படியானால் அவரது உருவம் என்னத்தைத் தான் விளக்குகின்றது. எல்லாமே அவர்தான் என்பதை அவரது உருவம் விளக்குகிறது. விநாயகரது உருவம் "ஓம்" என்ற பிரணவத்தின் சொரூபம். "ஓம" என்ற சொல்லே சிரு'டியின் ஆதியும் அந்தமுமாகும். ஓங்காரமே அணுவுக்கும் நுண்ணியதான அமைப்பின் சுழல் நாதம். அதனால் உலகத்தின் மூலாதார ஒலி. சகலத்தையும் இயக்கும் ஒலி. அந்த ஒலி நின்றிடின் உலக இயக்கம் நின்றுவிடும். எங்கும் சூன்யமாகிவிடும்.

விநாயகரது தோற்றத்தின் விளக்கம்

யானைத் தலை: யானைகள் புத்திக் கூர்மையும், நல்ல ஞாபக சக்தியும் கொண்டவை என்பது எல்லோரும் அறிந்ததே. விநாயகரின் பெரிய தலை அவரது சிந்தனா சக்தியை வெளிப்படுத்துகிறது.

பெரிய காது: அவர் அறிவில் சிறந்தவர், எல்லாம் அறிந்தவர் என்பதை சுட்டிக்காட்டுகிறது. சுளகு பதர்களை நீக்கி, நெல் மணிகளை சேகரிப்பது போன்று விநாயகரும் எது உண்மை எது பொய் என்று அறிந்து கொள்ளும் தன்மை உடையவர் என்பதை விளக்குவதற்காகவே அவரது காது சுளகு அமைப்பில் இருக்கிறது. அடியவர்களின் கோரிக்கையை மிகுந்த கவனத்துடன் கேட்பவர் என்பதையும் அவரது பெரிய காது எடுத்துக்காட்டுகின்றது.

தும்பிக்கை:விஞ்ஞானம் என்றுமில்லாத அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. இருந்த போதிலும் அதனால் சின்னஞ் சிறிய ஊசியை கீழே இருந்து எடுக்கவும் அதே சமயம் ஒரு தொன் எடைகொண்ட பொருளைத் தூக்கவும் வல்லமை கொண்ட இயந்திரத்தை உருவாக்க முடியவில்லை. ஆனால் யானையின் தும்பிக்கையானது நிலத்தில் இருந்து சிறிய துரும்பை எடுப்பதற்கும் பென்னம் பெரிய மரத்தை வேருடன் பிடுங்கவும் ஆற்றல் கொண்டதாக இருக்கிறது. பிள்ளையார் அளவற்ற ஆற்றலும் அதே சமயம் மென்மைத் தன்மையும் கொண்ட ஒருவர் என்பதை அவரது தும்பிக்கை உணர்த்துகின்றது. யானையின் தும்பிக்கை எந்த நேரமும் அசைந்தபடியே இருக்கும். ஒருவர் எந்நேரமும் சுறுசுறுப்பாக செயலாற்ற வேண்டும் என்பதையும் தும்பிக்கை போதிக்கின்றது.

தொந்தி:பிரபஞ்சம் முழுவதும் அவரது வயிற்றில் பத்திரமாக இருக்கின்றது என்பதை விளக்குகிறது.

சிறிய கண்கள்:தன்னிடம் வரம் கேட்பவர்களது தராதரம் பாராது, யாராயிருந்தாலும் வரத்தினை வாரி வழங்கக் கூடியவர் என்பதை உணர்த்துகின்றன. அவரது கடைக்கண் பார்வை உலகில் உள்ள அற்ப பொருளின் மீது கூட விழும் என்பதையும் சிறிய கண்கள் விளக்குகின்றன.

விநாயகரை வழிபடும் முறை

ஒரு தடவை மஹாவிஷ்ணுவின் சக்கரத்தை பிள்ளையார் விளையாட்டாகப் பிடிங்கிக் கொண்டாராம். அதனை வாங்குவதற்கு மஹாவ'ணு எத்தனித்த போது பிள்ளையார் சக்கரத்தை தனது வாயில் போட்டுக் கொண்டார். அதனைத் தரும்படி மஹாவி'ணு அதட்டிப்பார்த்தார். கெஞ்சிப் பார்த்தார். பிள்ளையார் மசிந்து கொடுக்கவில்லை. பிள்ளையாரை சிரிக்க வைத்தால் அவரது வாயில் இருந்து சக்கரம் கீழே விழுந்துவிடக் கூடும் என்று நினைத்த மஹாவி'ணு உடனே வலது கையால் இடது காதையும் இடது கையால் வலது காதையும் பிடித்தபடி உட்காருவதும் எழுவதுமாய் நாட்டியம் ஆடத் தொடங்கினார். அதனைப் பார்த்த பிள்ளையாருக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. விழுந்து விழுந்து சிரித்தார். அவரது வாயில் இருந்து சக்கரம் கீழே விழுந்தது. மஹாவி'ணு அதனை எடுத்து வைத்துக் கொண்டார். தோப்புக்கரணம் போடப்படுவது எவ்வாறு ஆரம்பமானது என்பதற்கு இக்கதை சொல்லப்படுகின்றது. இன்னும் ஒரு கதையும் உண்டு. அசுரர்களது கை ஓங்கியிருந்த காலத்தில் அவர்களது கொடுமைக்கு தேவர்கள் இலக்கானார்கள். முனிவர்களையும் அசுரர்கள் விட்டு வைக்கவில்லை. தேவர்களையும் முனிவர்களையும் சிறுமைப்படுத்த வேண்டும் என்று எண்ணிய அவர்கள் தங்களது தலைவனுக்கு முன் தோப்புக்கரணம் போட வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தினார்கள். தேவர்களும் முனிவர்களும் கேட்டுக் கொண்டபடி விநாயகர் அசுரர்களை அழித்தார். அதனால் மகிழ்ந்த தேவர்களும் முனிவர்களும் தங்களது நன்றியைத் தெரிவிக்குமுகமாக விநாயகர் முன் தோப்புக்கரணம் போட்டார்கள். பிள்ளையார் முன் தோப்புக்கரணம் போடும் வழக்கம் எவ்வாறு தோன்றியது என்பதற்கு கதைகள் சொல்லப்பட்டாலும் நம் குற்றங்களுக்கு நாமே தண்டனை விதிப்பதாக தோப்புக்கரணம் ஏன் அமையக் கூடாது? தோப்புக்கரணம் என்ற பெயர் எப்படி வந்தது என்பது குறித்து காஞ்சி முனிவர் சந்திரசேகரர் இவ்வாறு கூறியிருக்கிறார் தோர்பி என்றால் கைகளினால் என்று அர்த்தம். கர்ணம் என்றால் காது. தோர்பி கர்ணம் என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது. தோர்பிக்கர்ணம் என்ற சமஷ்கிருத பதம் சிதைந்து தோப்புக்கரணம் ஆகியுள்ளது. தோப்புக்கரணம் போட்டு விநாயரை வழிபடும்போது உடலில் மூலதார சக்கரத்திற்குள் யோக நாளம் தட்டி எழுப்பப்பட்டு குண்டலினி சக்தி விழித்துக் கொள்கின்றது என்று யோகம் செய்பவர்கள் கூறுகின்றார்கள். தோப்புக்கரணம் போடும் போது நான் என்ற அகந்தை அழிந்து அவரே அடைக்கலம் என்றாகின்றது. நாளடைவில் ஆணவம் அழிகின்றது. இதுவே தோப்புக்கரணத்தின் தத்துவம். வியாசர் பெருமான் சொல்லச் சொல்ல பாரதத்தை எழுதியவர் விநாயகர். எழுதுவதற்கு தனது தந்தங்களில் ஒன்றை முறித்துக் கொண்டவர். அதனால் எழுதுபவர்கள் எல்லோரதும் தெய்வம் பிள்ளையார். அதனை நினைவில் வைத்தே பிள்ளையார் சுழி போட்டு எழுதப்படுவது ஆரம்பமாயிற்று. தேங்காய் உடைந்து சிதறுவது போல திரண்டு உருண்ட எமது பாவங்களும் தொலைய வேண்டும் என்பதற்காக சிதறு தேங்காய் உடைக்கப்படுகின்றது.

34th பக்கம் பார்க்கவும்

ஆழிப்பேரலையும் மக்களும் மதங்களும்

சி.ம.கார்த்திகேயன்

இந்த புவிக்கோளம் தோன்றி நாலரை மில்லியன் ஆண்டுகள் ஆகின்றன. பூமியின் மேற்பரப்பு குளிர்ந்து கெட்டிபட்டுள்ள போதிலும், உட்பகுதி இன்னும் குளிரவில்லை. அங்கு பாறைகள் உருகிய நிலையில் கொதித்தபடி இருக்கின்றன. பூமியின் மேற்பகுதி பல்வேறு தகடுகளினால் ஆனது. இந்தத் தகடுகள் அவற்றின் கீழ் கொதித்துக் கொண்டிருக்கும் பாறைக் குழம்புகள் காரணமாக அடிக்கடி ஒன்றுடன் ஒன்று உராய்கின்றன. நகர்கின்றன. இந்த உராய்வுகளும் நகர்வுகளும் ஏற்படும் போதுதான் புவி நடுக்கம் உண்டாகின்றது என்று கடந்த 30 ஆண்டுகளாக புவியியலாளர்கள் கூறிவந்துள்ளார்கள். எனினும் இந்த கோட்பாடு தவறு என்று நோர்வே பேராசிரியர் கார்ஸ்டென் எம். ஸ்டோர்வெட் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவரது ஆய்வின்படி பூமியின் தரைமட்டத்திற்குக் கீழே ஏற்படும் வாயு வெடிப்பு காரணமாகவே நில நடுக்கம் ஏற்படுகின்றது. அமெரிக்க புவியியல் ஆய்வுத்துறை ஆண்டொன்றுக்கு மூன்று மில்லியனுக்கும் அதிகமான நில நடுக்கம் ஏற்படுவதாக அறிவித்துள்ளது. அதாவது நாளொன்றுக்கு 8000 நில நடுக்கங்கள். விநாடிக்கு 11 தடவைகள். இருந்த போதிலும் பூகம்பம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதை அறிவியலாளர்களினால் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறமுடிவில்லை.

நில நடுக்கம் கடலின் அடியில் ஏற்படும் போது பாரிய அலைகள் எழுகின்றன. உலக நாடுகளில் ஜப்பான் கடல் அலைகளின் தாக்குதல்களுக்கு அடிக்கடி உள்ளானதால் அதன் அகராதியில் அதற்கென ஒரு சொல்லும் இடம் பெற்றுள்ளது. Tsunami என்பதே அந்தச் சொல். வளர-என்றால் துறைமுகம். யெஅ-என்றால் அலைகள். சுனாமி என்றால் துறைமுக கடலலை என்று அர்த்தம். டிசம்பர் 26ம் திகதி இந்தோனேசிய தீவான சுமாத்திராவுக்கு அப்பால் கடலடியில் பூகம்பம் ஏற்பட்ட போது அதனால் வெளிப்படுத்தப்பட்ட சக்தி பூகம்பம் மையம் கொண்டிருந்த பகுதியை பல மீட்டர்கள் உயரத்திற்கு செங்குத்தாக எழுப்பியது. அதனால் பல நூறு கன கிலோமீட்டர் நீர் அங்கிருந்து இடம் பெயர்ந்தது. பாரிய அலைகள் பரவத் தொடங்கின. ஆழமான கடலில் சுனாமி மணித்தியாலத்திற்கு சுமார் 800 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து செல்லும். ஆழம் குறைந்த பகுதியில் அதன் வேகம் குறையுமாயினும் அதற்குத் தக்கவிதமாக உயரம் அதிகரித்து விடும். ஆழம் குறைந்த பகுதியில் இது மிக உயரமாகச் செல்வதால் கரையை அண்டிய பகுதிக்குள் நீண்ட தூரத்திற்கு கடல் அலை சென்று விடுகின்றது. அதனால் பாரிய உயிரிழப்பும் சொத்து இழப்பும் ஏற்படுகின்றது. இப்படியான கடல் கொந்தளிப்பே இலங்கை, இந்தியா, இந்தோனேஸியா உள்ளிட்ட பல நாடுகளில் ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமானவர்களை காவு கொண்டது.

இடம் பெற்ற கடலடி நிலநடுக்கத்தை மண்ணியல் ஆய்வாளர்கள் கணக்கிட்டிருந்தாலும் அல்லது அது இடம் பெற்ற மையப்பகுதியில் எழுந்த அலைகளின் உயரத்தை அவர்கள் கணக்கிட்டிருந்தாலும் கூட ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இலங்கை வரை கடல் அலை உயர்ந்து செல்லும் என்பதை அவர்களினால் கண்டறிந்திருக்கவே முடியாது. அதனால் எச்சரிக்கை மூலம் ஏற்பட்ட உயிரிழப்புகளை அவர்களினால் தடுத்து நிறுத்தி இருக்கவும் முடியாது என்று மண்ணியல் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நவீன அறிவியலே அப்பாவிகளை கைவிட்டிருக்கும் போது பழமை போக்கு கொண்ட மதத்தலைவர்கள் உலகில் அதர்மம் அதிகரித்து விட்டது. அதனைச் சகிக்காத இறைவன் கொடுத்த தண்டனையே இது என்று நா கூசாது தெரிவித்திருக்கிறார்கள். இயற்கை அனர்த்தத்தின் போது இந்துக்கள், முஸ்லீம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் பலியாகியிருக்கிறார்கள். உல்லாசப் பயணிகளான யூதர்களும் பலியாகியிருக்கிறார்கள். ஆக உலகில் உள்ள பிரதான மதங்களைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் இந்து ஆலயங்களிலும், இஸ்லாமிய மசூதிகளிலும், கிறிஸ்தவ வழிபாட்டிடங்களிலும், யூத வணக்கத்தலங்களிலும் உள்ள மத குருமார்கள் பலர் தாங்கள் இருண்ட காலம் என்று வர்ணிக்கப்படும் மத்திய காலப் பகுதியில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதை நிரூபித்துள்ளார்கள்.

இந்தியாவின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான பிர்லாவின் குடும்பம் புது டில்லியில் பிரமாண்டமான இந்து ஆலயம் ஒன்றை பளிங்குக் கல் கொண்டு கட்டியுள்ளது. அதன் மதகுருவான பண்டிட் ஹரிகிரி'ண சாஸ்த்திரி மனிதர்கள் செய்த பாவத்தின் பலனே இந்தப் பேரழிவை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இஸ்ரேலின் பிரதம யூத மதகுருவான சுலோமோ அமர் மனிதர்கள் மத்தியில் காணப்படும் பகைமை உணர்வுகள், இரக்கச் சிந்தனையின்மை, ஒழுக்கக் கேடுகள் காரணமாகவே இத்தண்டனை கிடைத்துள்ளது என்று சொல்லியிருக்கிறார். மலேசியாவின் முஸ்லீம் மதகுருவும் அந்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர்களில் ஒருவருமான அசீன் அப்துல் ர'ாக் தன்னால் படைக்கப்பட்ட இந்த உலகத்தை தன்னால் அழிக்கவும் முடியும் என்பதை ஆண்டவன் இந்த பேரழிவின் மூலம் உலகத்திற்கு நினைப்பூட்டியிருக்கிறார் என்று தெரிவித்திருக்கிறார். பிரிட்டி' இஸ்லாமிய மதகுருவான 'ேக் இப்ரஹிம் மோக்ரா தன்னால் படைக்கப்பட்ட அனைத்தையும் அடக்கி ஆளும் அதிகாரத்தைக் கொண்டவன் இறைவன் அப்படிப்பட்டவனின் கோபத்திற்கு ஆளாகாது அவனது கருணையையும் இரக்கத்தையும் பெறக் கூடிய வழியில் மனிதன் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். சில கிறிஸ்தவ மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் உலகம் விரைவில் அழியப் போவதன் அறிகுறியே இந்த பேரழிவு. மீட்பரின் வரவை கட்டியம் கூறுவதே இந்த அனர்த்தம். புனித வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள இறுதி ஏடு குறிப்பிட்டுள்ள அழிவும் குழப்பமும் வரவிருப்பதை எடுத்துக்காட்டுகிறது சுனாமி நாசம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் உலகம் அழியப் போகிறது என்று பிரசாரம் செய்து வருகிறேன். வீடுகளைத் தட்டி அங்கிருப்பவர்களுக்கு நான் உலகம் அழியப் போகிறது என்று சொன்னால் முன்னரெல்லாம் முகத்தில் அறைவது போல தங்கள் கதவுகளை அடைத்துக் கொண்டவர்கள் இப்பொழுது எனது போதனைகளை விருப்பமுடன் கேட்கிறார்கள் என்று கூறுகின்றார் 31 வயதான சைபிரஸ் யேஹோவா சாட்சிகள் கிறிஸ்தவ மதப் பிரிவைச் சேர்ந்த மரியா. ஏற்பட்ட பேரழிவு உலகம் விரைவில் அழியப் போவதை எடுத்துக்காட்டுகின்றது என்கிறார் அவர்.

சுனாமி அலைகள் வரப் போவதை அறிந்த வன விலங்குகள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று உயிர்தப்பியிருக்கும் போது மனிதர்கள் இயற்கை அனர்த்தத்திற்குத் தப்ப முடியாதிருந்திருக்கிறார்கள். இலங்கை யால பூங்கா இலங்கையின் தேசிய பூங்காக்களில் மிகவும் பெரியது. 625 சதுர கிலோ மீட்டர் வி'தீரணம் கொண்டது. 200 யானைகள், ஏராளமான முதலைகள், காட்டு பன்றிகள், நீர் எருமைகள், சிறுத்தைகள் போன்றன இந்த பூங்காவில் வசிக்கின்றன. சுனாமி அலைகள் கரையில் இருந்து சுமார் 3.5 மீட்டர் தூரம் வரை பூங்காவினுள் நுழைந்திருந்தன. இருந்த போதிலும் ஒரு வனவிலங்கு கூட உயிரிழக்கவில்லை என்று அனர்த்தத்தின் பின்னர் பூங்கா பிரதேசத்தை சுற்றிப் பார்த்த அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திய பிரதேசமான அந்தமான் நிக்கோபாரின் ஒரு பகுதியில் வசித்த பூர்வ குடியினரும் எந்தவித பாதிப்பும் இன்றி உயிர் தப்பியிருக்கிறார்கள். காற்று, கடல், பறவைகள் ஆகியவற்றை அவதானிப்பதன் மூலம் பரம்பரையாகப் பெறப்பட்டு வந்த அனுபவ அறிவே அவர்களது உயிர்களை சுனாமி அனர்த்தத்தின் போது காப்பாற்றியிருக்க வேண்டும் என்று அரசாங்க அதிகாரிகளும் மனித இன ஆராய்ச்சியாளர்களும் எண்ணுகின்றார்கள். இந்த பூர்வ குடிகள் கற்காலத்தில் மனிதன் எவ்வாறு வாழ்ந்தானோ அதே நிலையில்தான் வாழ்கின்றார்கள். கற்களை ஒன்றுடன் ஒன்று உராய்ந்தே நெருப்பை உண்டாக்குகிறார்கள். மீனையும் விலங்குகளையும் வேட்டையாடுவதற்கு வில்லையும் அம்பையும் பாவிக்கிறார்கள்.

மறுபக்கம் பார்க்கவும்

ஆழிப்பேரழையும் மக்களும் மதங்களும்....

தளைகளினாலும் காய்ந்த புல்லினாலும் வேயப்பட்ட கூரையை உடைய சமூக கூடங்களிலேயே அவர்கள் வசிக்கின்றார்கள். தங்களது பாரம்பரியமும் பழக்க வழக்கங்களும் வெளி உலகத்தைச் சேர்ந்தவர்களினால் பாழடைந்து விடும் என்று அஞ்சும் அவர்கள் அன்னியர் எவரையும் தங்கள் பகுதிக்குள் அனுமதிப்பதில்லை. கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட பாதிப்புகளினால் பூர்வ குடிகள் அவதியுறக்கூடும் என்ற பயத்தில் அவர்களது நிலைமையை நேரில் கண்டறிவதற்காக ஹெலிகொப்டரில் அதிகாரி ஒருவர் வந்த போது அவரது உலங்கு வானூர்தி நோக்கி பிறந்த மேனியராகக் காணப்பட்ட ஒருவர் அம்பு எய்யும் அளவுக்கு இந்த பூர்வீக குடிகள் தங்களது தனித்தன்மையை பாதுகாத்து வருகிறார்கள். அந்தமான் நிக்கோபாரைச் சேர்ந்த பூர்வீக குடிகள் உயிர் தப்பியது போன்று இந்தோனேசியாவின் தீவுகளில் ஒன்றில் இருந்தவர்களும் உயிர் தப்பியிருக்கிறார்கள். வருடத்தின் பெரும் பகுதியைக் கடலில் கழிக்கும் இவர்கள் திடீரென்று கடல் நீர் கரையில் இருந்து விலகிச் சென்று நிலம் அதிக தூரத்திற்குத் தெரிவதைக் கண்டதும் உடனே உயரமான இடத்திற்குச் சென்று விட்டார்கள். அயலில் இருந்த கிராமங்களைச் சேர்ந்தவர்கள் ஏற்படவிருந்த ஆபத்தை உணராது கடல் விலகிச் சென்றதால் தென்பட்ட மணலிலும் கற்பாறைகள் மீதும் கிடந்து துடித்த மீன்களையும் இறால்களையும் சேகரிக்கப் போய் தங்களது உயிர்களையும் இழந்துள்ளார்கள். விலகிச் சென்ற கடல் சில நிமிடங்களில் பாரிய அலைகளை வீசி வந்து அவர்களை கடலுக்குள் இழுத்துச் சென்றிருந்தது.

பல மீட்டர் உயரத்திற்கு எழுந்த கடல் அலைகளினால் தமிழ் நாட்டின் கரைப் பகுதி கறுப்பு ஞாயிற்றுக்கிழமை பேரழிவைக் கண்ட போது கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் எந்தவித ஆபத்தும் இன்றி பாதுகாப்பாக இருந்துள்ளார்கள். அவர்களில் எவரும் உயிரிழக்கவும் இல்லை. காயம் அடையவும் இல்லை. அதே சமயம் கரைப்பகுதியை அண்டியிருந்த அவர்களது குடும்பத்தினரும் அயலவரும் உயிரிழந்தார்கள். காயம் அடைந்தார்கள். கரையில் இழுத்து விடப்பட்டிருந்த படகுகளும் ஏனைய சொத்துக்களும் சேதமடைந்தன. அல்லது முற்றாக அழிந்தன. தமிழ்நாட்டில் சுழற்சி முறையில் மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றார்கள். கடலுக்குச் சென்ற மீனவர்கள் உயிர் தப்பிய போது கரையில் இருந்த மீனவர்கள் மரணத்தைத் தழுவியிருப்பதும் இடம் பெற்றுள்ளது.

வனவிலங்குகள் உயிர் தப்பியதற்கு பல காரணங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு ஆறறிவு இருக்கின்றது. மனிதருக்குக் கேட்காத நுண்ணிய அதிர்வுகளை கேட்கும் திறன் இருக்கின்றது. அதனால்தான் ஆழிஅலை தூரத்தில் வரும் போதே அந்த அதிர்வுகளைக் கேட்டு அவை தப்பியிருக்கின்றன என்பவை அவற்றில் சில. கடலுடன் நெருங்கிய தொடர்புடைய மக்கள் இயற்கையின் எச்சரிக்கையை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் கொண்டிருந்ததாலேயே அந்தமான் நிக்கோபாரிலும் இந்தோனேசியாவிலும் உயிர் தப்பியிருக்கிறார்கள். கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் ஆழி அலைகளை அவதாணித்திருந்த போதிலும் அவை கரையை அடையும் போது கோரத்தாண்டவம் ஆடும் அளவுக்கு பலம் பெறக்கூடும் என்பதை அறிந்திருக்கவில்லை. கரையில் இருந்த அவர்களது சகாக்களும் கூட கடல் திடீரென்று வற்றியது பேரழிவு அலைகள் வரவிருப்பதை சுட்டிக்காட்டுகின்றது என்பதை உணரவில்லை. இறைவனால் தரப்பட்ட இந்த உலகின் இயற்கை பற்றிய அறிவு கொண்ட மிருகங்களும் மக்களும் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள நவீன காலத்திற்கேற்ப தங்களை மாற்றி அமைத்துக் கொண்டவர்கள் இயற்கையின் எச்சரிக்கையை பகுத்தறிய முடியாத நிலையில் பேரழிவைச் சந்திக்க வேண்டி வந்துள்ளது. இதுதான் யதார்த்தம். பழமைப் போக்கு கொண்ட மதவாதிகள் கூறுவது போன்று ஆண்டவனுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இதனை நன்குணர்ந்த மதத் தலைவர்களும் மக்களும் மதம் என்பது மனித நேயத்தை வளர்ப்பதாக அமைய வேண்டும் என்று நம்பியதால் உயிரிழந்தவர்களின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்வதுடன் பாதிக்கப்பட்டவர்களின் மனவேதனைகளில் பங்கு கொள்ளும் தலையாய பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். கனடாவில் ஜனவரி மாதம் 8ம் திகதி நாடாளாவிய ரீதியில் தேசிய துக்க தினம் அனுட்டிக்கப்பட்டிருக்கிறது.



அரசாங்கத் தலைவர்களும் மதத்தலைவர்களும் மக்களும் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு பலியானவர்களின் ஆன்மா சாந்திக்காக பிரார்த்தனை செய்துள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ திடசங்கற்பம் எடுத்துக் கொண்டுள்ளார்கள். டொரோண்டோவில் உள்ள இந்து ஆலயங்களில் ஆழிப்பேரலையினால் உயிரிழந்த அனைத்து மக்களின் ஆத்ம சாந்திக்காக மோட்ச அர்ச்சனைகள் இடம் பெற்றுள்ளன. கிறிஸ்தவ, இஸ்லாமிய,பௌத்த வணக்கத்தலங்களிலும் கூட உயிரிழந்தவர்கள் நினைவாக பிரார்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. நாடளாவிய ரீதியில் அரைக் கம்பத்தில் தேசியக் கொடி பறந்தது.

இலங்கையிலும் பல ஆலயங்களில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான மோட்சாரச்சனை நடைபெற்றுள்ளது. ஜனவரி மாதம் 9ம் திகதி வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் பல நூற்றுக்கணக்கான தீபங்கள் ஏற்றப்பட்டு பிரார்த்தனை செய்யப்பட்டிருக்கிறது. இந்த இந்துக்கோவிலில் பௌத்த தேரரான வணக்கத்துக்குரிய சீயம்பலகஸ்வ சிமலசார மற்றும் கிறிஸ்தவ மதகுருவான வணக்கத்துக்குரிய அருட் தந்தை டேவிட் குகனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளார்கள்.

அமெரிக்க யூத மதகுருவான டானியல் ஐசாக் சுனாமி இயற்கை நியதிப்படியே இடம் பெற்றுள்ளது. இது ஆண்டவனின் செயல் அல்ல. கடவுள் உலகின் ஒரு பகுதியில் வாழும் மக்களைத் தேர்ந்தெடுத்து, நான் அவர்களைத் தண்டிக்கப் போகின்றேன் என்று சொல்லப் போவதில்லை. உலகம் இயற்கையாகவே அதன் அமைப்பில் சில குறைபாடுகளைக் கொண்டுள்ளது. அந்த குறைபாட்டை ஏற்றுக் கொண்டு வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்று ஆலோசனை தெரிவித்திருக்கிறார். பேராசிரியர் கார்ஸ்டென் எம். ஸ்டோர்வெட் போன்ற அறிவியலாளர்கள் பூமி வாழ்கின்ற ஒரு கிரகம். அதில் தொடர்ச்சியாக மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த மாற்றங்கள் சில சமயம் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவர்களது கூற்றுகள் புவியின் அமைப்பு காரணமாகவே நிலநடுக்கம் ஏற்படுவதை உறுதிப்படுத்துகின்றன. மக்களைத் தண்டிப்பதற்கு இறைவனால் ஏற்படுத்தப்படுவதாகக் கூறப்படுவதை பொய்யாக்குகின்றன. ஏற்பட்ட அனர்த்தம் உலகில் மனித நேயம் இன்னும் அழிந்துவிடவில்லை. மாறாக அதிகரித்துக் காணப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. பாதிப்படைந்தவர்களின் துயரில் பங்கு கொள்ளும் உணர்வு மேலோங்கியிருப்பதை வெளிப்படுத்துகிறது. மக்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டாக அமையும் என்ற உண்மையை மதங்கள் மக்களுக்குப் போதிக்க வேண்டும். இவ்விடத்தில் ஆயிரமாண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலரின் வாக்கு சிந்திக்கத்தக்கது:

நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே.

நடமாடும் கோவில்கள் மனிதர்கள். அவர்களுக்குத் தரப்படுவது சிற்ப சித்திரங்கள் அமைந்த கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குத் தருவதற்கு ஒப்பானது என்கிறார் அன்பே சிவம் என்று போதித்த திருமூலர். அவர் கூறும் மனப்பக்குவத்தை வளர்ப்பவை மதங்களே.

ஆன்மீக விருந்து

காயத்திரி மந்திரத்தின் மகிமை

விருந்து தருபவர், கவிஞர் அகில்

காயத்திரி மந்திரத்துக்கு இணையான மந் திரம் இல்லையென்பர். ' காயந்தம் த்ராயதே ' யார் உபாஸிக்கிறார்களோ அவர்களை காயத்திரி காத்து அருளுவாள் என்பதே இ தன் பொருளாகும்

இவ்வளவு சக்தி வாய்ந்த காயத்திரி தேவி யார் என்பதைப் பார்ப்போம், ஒருமுறை பிரமதேவன் மிகப்பெரிய யாகத்தைச் செய் தான். அந்த யாகத்தின் பலனை எல்லோரும் பெற வேண்டும் என்று அவன் விரும்பிய போது யாக குண்டத்திலிருந்து காயத்திரி அன்னை தோன்றினாள்.

காயத்திரி அம்மன் ருத்திர லோகத்தில் கௌரீ என்றும், வி'ஷ்ணு லோகத்தில் கமலா என்றும், ப்ரமலோகத்தில் காயத்திரி என்றும் வாசம் செய்கின்றாள். இச்சா சக்தி, க்ரியா சக்தி, ஞான சக்தி என்று பெயர் பெற்றவளும் இவளே ஆகும்.

காயத்திரி அம்மனின் தத்துவம்

காயத்திரி ஐந்து முகங்களையும் பத்துக் கரங்களையும் உடையவள். ஐந்து முகங் களும் ஒவ்வொரு விதமாக பிரகாசிக்கின்றன.' முத்துப்போல் பிரகாசிக்கும் முகம் ஒன்று, பவளம் போல் பிரகாசிக்கும் முகம் ஒன்று, நீலவானம் போல் பிரகாசிக்கும் முகம் ஒன்று, தூய வெள்ளை நிற முகம் ஒன்று ஆக ஐந் து முகங்களையும் பஞ்ச பூதங்களைக் குறிககும்.

காயத்திரியம்மன் தனது பத்துக்கரங்களிலும் பத்து வித ஆயுதங்களை ஏற்றியிருக்கிறாள். முதற் கரத்தால் நம்மை அன்போடு அழைக் கிறாள். இரண்டாவது கரத்தால் யாமிருக்க பயம் ஏன்? என்று கேட்கின்றாள். மூன்றாவது கரத்தால் அன்போடு அடக்கி ஆள்கின்றாள். நான்காவது கரத்தால் அன்பர்களது பகைவர் களைப் பாசக்கயிற்றால் கட்டி விடுகின்றாள். ஆக்கும் தொழிலையும் நலம் அளிக்கும் தொழிலையும் அவள் கைக்கொண்டிருப்பதை முறையே கதை, சங்கு, சக்கரங்கள், கமலங் கள், கபாலம் ஆகியவை நமக்கு விளக்கி நிற்கின்றன.

கதை

கேரள மன்னன் ஒருவன் இரவில் நல்ல தூக் கம்மின்றி தவித்தான். அவனது வைத்தியர் கள் பலவிதமான வைத்தியம் செய்தும் பலன் கிடைக்கவில்லை. அதற்கு காரணம் ஊழ் வினைதான் காரணம் என்று அறிந்த மன்னன் மேலும் வருந்தினான். காரணம் அவனுடைய ஊழ்வினையை யார் பெறுகின்றார்களோ! அவர்களுக்கு அவனது பாவம் போய்ச் சேரும் அப்படி செய்தால்தான் அவனுடைய நோய் தீரும்என்பதாகும்.இருந்தும் மன்னன் பின்வருமாறு அறிவிப்பு செய்தான்' அரசரின் ஊழ் வினையை பெறுபவர்களுக்கு அரசர் தங்கத்தால் செய்யப் பட்ட தமது உருவத்தை தானமாகத் தரவிருக் கின்றார், பெறுபவர்களுக்கு கூடவே மன்னருக் கு இருக்கும் நோய் போய் சேரும் ' என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வறிவிப்பை அறிந்து கேரள நாட்டிலிருந்து யாரும் வாரத போதும், கன்னட தேசத்திலிருந்து ஒரு பிரம் மச்சாரி தானம் பெற முன் வந்தான்.

அவனிடம் மன்னன் ' தானம் பெறுவதால் ஏற் படும் விளைவை அறிந்து தான் நீங்கள் வந்தீர் களா?' என்று கேட்டார். அதற்கு அவன்' மன் னா! நல்ல முறையில் அரசாட்சி செய்யும் தங் களுக்கு உதவவே வந்துள்ளேன் ' என்றான். அன்பரே இது தான் தாங்கள் ஏற்க இருக்கும் பிம்மம் ' என்று பிம்பத்தைக் காட்டினார். பிம் பத்தை உற்று நோக்கிய பிரம்மச்சாரி பிம்பத் திடம் ஏதோ கேட்டார். பிரம்மச்சாரி கேட்டதும் பிம்பம் மூன்று விரல்களைக் காட்டியது. அதற் கு பிரம்மச்சாரி மறுக்கவே, பிம்பம் இரண்டு விரல்களைக் காட்டியது. அதற்கும் பிரம்மச்சாரி மறுக்கவே, பிம்பம் கடைசியாக ஒரு விரலைக் காட்டியது. அதைத்தொடர்ந்து மன்னரின் நோய் அகன்றது. அதை அவதானித்த மன்னன் கேட் டான் ' அன்பரே! தான பிம்பத்திடம் நீங்கள் என்ன பேசினீர்கள் என்று நான் அறிந்து கொள் ளலாமா?' ,' மன்னா! நான் தினமும் காயத்திரி மந்திரத்தை ஜபம் செய்பவன் பிம்பத்திலிருந்து உங்கள் ஊழ்வினை என்னிடம் நான் மூன்று வேளையும் செய்த ஜபத்தின் பலனைக் கேட் டது, நான் மறுக்கவே இரண்டு வேளை செய்த ஜபத்தின் பலனைக் கேட்டது, அதற்கும் நான் மறுக்கவே படுத்தினார். அத்தகைய சக்தி வாய் ந்தகடைசியாக ஒருவேளை செய்த பலனைக் கேட்டது அதற்கு நான் சம்மதித்தேன், உங் கள் நோயும் தீர்ந்தது என்றான். ' ஒரு வேளை காயத்திரி ஜபத்திற்கே! இத்தனை சக்தியா? என்று மன்னன் ஆச்சரியத்தில் மூழ்கினான்.

பிரம்மதேவன் உருவாக்கிய காய்த்திரி தேவிக் கு மூலமந்திரத்தை இயற்றியவர், விஸ்வாமித் திர முனிவர் ஆவார். அதற்கும் ஒரு கதையுண் டு, வசி'ட்டமுனிவரின் தவவலிமையைப் பார்த் து தானும் அவரைப்போல வரவேண்டும் என் று விரும்பிய விஸ்வாமித்திர முனிவர் கடும் தவம் மேற்கொண்டார். அவர் மேற்கொண்ட தவத்தின் வெம்மை மூவுலகையும் வாட்டியது. அதைக்குறைக்கும் முகமாக வசி'டரே! விஸ் வாமித்திரமுனிவரிடம் வந்து ' நீங்கள் தான் பிரம்மரிீ ' என்று வாழ்த்தி அவரை சாந்தப் விஸ்வாமித்திரர் பிரம்மதேவன் உருவாக்கிய காயத்திரி அம்மனுக்கு ஒரு மந்திரம் இயற் றினார் அந்த மந்திரமே! பின்வரும் மூல மந் திரமாகும்.

ஓம் பூர்புவ ஸ்வஹா: தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந
ப்ர சோதயாத் '

மற்றைய தெய்வங்களின் மந்திரங்களை ஜபம் செய்வதற்கு முன் காயத்திரி மந்திரத்தை ஜபம் செய்து விட்டே மற்றைய தெய்வங்களின் மந் திரங்களை ஜபம் செய்ய வேண்டும் என்பது விதி. முதலில் அதிகாலையில் எழுந்து, குளிர் ந்த நீரில் குளிக்க வேண்டும், ஒரு கெண்டியில் தண்ணீர் வைத்துக் கொண்டும், ஒரு விரிப்பின் மீது உட்காந்து கொண்டும், கையில் ஜப மாலையை வைத்துக் கொள்ள வேண்டும். பின் னர் காயத்திரி மாதாவின் தோற்றத்தை படத் தின் மூலம் பார்த்து, மனக்கண்ணில் பதித்து கூடவே சூரிய பகவானையும், நாராயணனையும் ஒருமனப்படுத்தி ஜபம் செய்யவேண்டும். அப் படியாக காயத்திரி " மந்திரத்தை உச்சரிக்கும் போது பக்கத்தில் உள்ளவர்களுக்கு கேட்காத அளவிற்கு மெதுவாக சொல்ல வேண்டும்.

காயத்திரி மந்திரத்தின் பொதுவான அர்த்தம்: எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், சர் வ வல்லமையுள்ளவர், ஒளிமயமானவர், ஞான ஆனந்த உருவானவர், பயத்தை அழிப்பவர், உலகைப்படைத்தவர் யாவர்க்கும் மேலானவர் அவரை தியானிப்போம் என்பதாகும்.

செல்வச் சந்நிதி

பூசை என்பது தமிழ்ச் சொல். பூ மற்றும் செய் என்ற இரு சொற்களால் ஆனது. பூசை என்பது மலர்களினால் வணக்கத்தைச் செலுத்துவது. இந்து திராவிடர்கள் கிறிஸ்துவுக்கு முன் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே மலர்களும் பழங்களும் படைத்து இறைவனைத் தொழுதார்கள் என்பது அகழ்வு ஆராய்ச்சி முடிவுகள். அந்தக் காலத்தில் மந்திரங்கள் இல்லை. அக்கால மக்கள் மனத்தளவில் இறைவனை துதித்தபடி மலர் போன்றவை கொண்டு வந்தனை செய்துள்ளார்கள். அந்த மரபு இலங்கையில் இன்றும் பின்பற்றப்படுகின்றது. கதிர்காமம், செல்வச் சந்நிதி, மண்டூர் முருகன் ஆலயங்களில் மந்திர உச்சாடனங்கள் இன்றியே பூசைகள் நடை பெறுகின்றன. இந்தத் தலங்களில் ஞானிகளும் சாதாரண மக்களும் பல்லாயிரக்கணக்கில் கூடுவது பக்தி ஒன்றே போதுமானது இறைவன் அருள் பெற என்பதை எடுத்துக்காட்டுகின்றது. எந்த மந்திரங்களும் உச்சரிக்கப்படாத நிலையில் பூசைகள் நடைபெறும் முருகன் ஆலயங்களில் இலங்கை வடபுலத்தில் அமைந்திருப்பது செல்வச் சந்நிதி. தேற்கே அமைந்திருப்பது கதிர்காமம். கிழக்கில் அமைந்திருப்பது மண்டூர். கதிர்காமக் கந்தனது ஆலயத்தை ஒட்டி அமைந்திருப்பது செல்லக் கதிர்காமம். அந்தப் பெயரால் அழைக்கப்படும் சிறப்பைப் பெறுவது செல்வச் சந்நிதி. அடியார்களுக்கு தினமும் அன்னதானம் நடைபெறுவதால் அன்னதான முருகன் என்ற சிறப்புப் பெயரையும் செல்வச் சந்நிதியான் பெறுகின்றான்.

ஆத்ம பசியையும் உடல் பசியையும் ஒருசேர நீக்கும் முருகனது ஆலயம் யாழ்ப்பாண நகரில் இருந்து சுமார் 32 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தொண்டமானாறில் அமைந்துள்ளது. மூர்த்தி,தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புகளை உடையது. தென் இந்திய அரசனான குலோத்துங்க சோழனின் தளபதியாக இருந்த கருணகரத் தொண்டமானின் வழிநடத்தலின் கீழ் உருவான நீர்வழிப்பாதை தொண்டமானாறு என்று அவனது பெயரை நினைவு கூறுகின்றது. இந்த நீர்வழிப்பாதையின் கரையில் எழுந்ததே செல்வச் சந்நிதி ஆலயம். பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயம் 16ம் நூற்றாண்டில் அந்நியரால் அழிவுண்டது. இந்து மதம் மீண்டும் மறுமலர்ச்சி கண்ட காலத்தில் முன்னர் ஆலயம் இருந்த இடத்தில் புதிதாக ஆலயம் தோன்றியது. எனினும் தர்மகர்த்தாக்கள் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் ஆலயம் செவ்வனே இயங்க தடை செய்தன. இந்நிலையைக் கண்டு வருந்திய கதிர்காமர் என்ற பெரியார் கதிர்காமம் சென்று இறைவனிடம் வேண்டுகின்றார். முருகனின் பரம பக்தரான அவருக்கு வெள்ளியிலான வேல் ஒன்று கிடைக்கின்றது. அதனைக் கொண்டு வந்த அவர் கோயிலுக்கு அருகில் இருந்த மடம் ஒன்றில் ஸ்தாபித்து தினமும் பூசைகள் செய்து வந்தார். அவருக்கு மந்திரங்கள் எதுவும் தெரியாவிட்டாலும் இறைவனை பக்தி பூர்வமாக வணங்கித் துதிப்பதைப் பார்த்த ஆலய தர்மககர்த்தாக்கள் ஆலயத்தை அவரிடமே கையளித்து விடுகின்றார்கள். கதிர்காமக் கந்தனின் அருளால் கிடைத்த வேல் ஆலயத்தின் கர்ப்பகிரகத்தில் அருளாட்சி செய்கின்றது. கதிர்காமரின் வழித்தோன்றல்களே இன்றும் ஆலயத்தை நிர்வாகிக்கின்றார்கள்.

முருகன் கிரியைகள், சடங்குகள் முதலியனவற்றிலும் பார்க்க அடியாரது உண்மையான பக்தியைத் தான் எதிர்பார்க்கின்றான் என்பதை செல்வச் சந்நிதியில் நடைபெறும் பூசை முறை வெளிப்படுத்துகிறது. பூசகர் தனது வாயை துணியினால் மூடிக்கட்டியபடியே பூசைகளைச் செய்கின்றார். யாழ்ப்பாணத்தில் உள்ள வேறு கோயில்களில் ஆகம விதிப்படி பூசைகள் நடைபெறும் போது செல்வச் சந்நிதியில் மேற்கொள்ளப்படும் தனித்துவமான பூசை முறை எந்த



இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வேல் வழிபாடும் முதன்மை பெற்றுள்ளது. திருமுருகாற்றுப்படை தமிழ் மந்திரங்கள் நிறைந்த நூல். நாளும் ஓதி பலன் பெறுவதற்கான அருளமுதம். 317 வரிகளில் முருகனின் பெருமையையும் அவன் எழுந்தருளியிருக்கும் ஆறு படை விடுகளின் சிறப்பையும் எடுத்துக் கூறுவது. அதன் மையக் கருத்தை 62 முதல் 66 வரையிலான ஐந்தே வரிகளில் அடக்கி விடுகின்றார் திருமுறுகாற்றுப் படையைத் தந்த நக்கீரர்.

சேவடி மலரும் செம்மல் உள்ளமொடு
நலம் புரி கொள்கைப் புலம் பிரிந்துறையும்
செலவு நீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே.



முருகனின் திருவடிகளைத் தரிசிக்க வேண்டும். அவனைச் சார்ந்து ஒழுக வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு பயணம் தொடங்கியிருக்கிறாய்ஐம்புலன் செல்லும் பற்றை விட்டு நல்வழியில் அறிவைச் செலுத்தி நீ வாழ விரும்பினால் உனக்கு. எல்லா நலன்களும் கிட்டும். கருதிய யாவும் கைகூடும். முருகனைத் தரிசிக்க வேண்டும் என்ற இந்த விருப்பம் இந்தப் பிறவியில் புதிதாய்த் தோன்றவில்லை. பல பிறவிகள் எடுத்து உன் நெஞ்சிலே தோன்றி வளர்ந்து வந்த ஆசை இன்று கைகூடும் காலம் நெருங்கியது. நினைத்ததை அடையப் போகிறாய். இது நிச்சயம் என்கிறார் நக்கீரர் இந்த வரிகளின் மூலம். அவர் கூறிய மனப்பக்குவம் அடையப் பெற்ற அடியார்கள் ஏராளமானவர்கள் செல்வச் சந்நிதி வீதிகளிலும் மடங்களிலும் தங்கி இருந்து அவனை வணங்கித் துதிப்பது வேறு எந்த ஆலயத்தின் சுற்றாடலிலும் காணப்படாத ஒன்று.

கல்லா கடவுளா?

நம்பிக்கைதான் வாழ்க்கையின் அடிப்படை. நாளை நம்முடையதா. இல்லை நமனுடையதா என்பது தெரியாது. இதையும் மீறி ஆசைகள். இலக்குகள் என நாம் முயற்சிகளைத் தொடர்கிறோம். இந்த முயற்சிதான் தனிமனித வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் வழிவகுக்குகிறது. நாத்திகம், ஆத்திகம்- இவை இரண்டும் நம்பிக்கைகள். வித்தியாசமான மன நிலைகள். கோயில் விக்கிரகத்தை கல் என்கிறான் நாத்திகன். தன் பார்வை மட்டுமே உண்மை. மற்றவை எல்லாமே பொய் என்கிறது அவனது பகுத்தறிவு. அந்தக் கல் கடவுளேதான் என அழுத்தமாக நம்புகின்றான் ஆத்திகன். ஆனால் இந்த விவாதத்திற்கு விஞ்ஞானி என்ன பதில் சொல்கிறான்? விக்கிரகம் கல்லா, கடவுளா என்பதை முன்கூட்டியே தீர்மானிக்கக் கூடாது. ஆராய்ந்து பார்ப்போம். தர்க்கரீதியான வாதங்களும் அறிவார்ந்த பரிசோதனைகளும் கடவுளா கல்லா என்ற கேள்விக்கு பதில் சொல்லட்டும் என்கிறான்.

மனித வாழ்க்கை முழுக்கத் தேடல்தான். அறிவையும், உண்மையையும் தேடுகிற மனதுக்கு முதல் தேவை என்ன தெரியுமா? திறந்த மனம்! நம் வீட்டில் ஒரு கிணறு இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதிலிருந்து நாம் தண்ணீரே எடுப்பதில்லை. அதனால் ஊற்றுச் சுரப்பதே நின்று விட்டது. கிணற்றுக்குள் குப்பை விழக்கூடாது என்று அதை மூடி வைக்கின்றோம். அதனால் கிணற்றுத் தண்ணீரில் சூரிய வெளிச்சம் படுவதே இல்லை. கிணற்றை நன்றாகப் பாதுகாப்பதாக நாம் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அந்தக் கிணறு என்ன ஆகும்? சாக்கடை நீராகும். அதேபோல் மனச்சாளரங்களை மூடிவைத்துப் புதிய அறிவு, புதிய சிந்தனைகளை மனங்களில் வேரூன்ற விடாமல் மறுத்தால் மதவெறி, இனவெறி, குறுகிய கண்ணோட்டம் என்ற குப்பைச் செடிகள்தான் அங்கே வளர முடியும். நான் நினைப்பது மட்டுமே சரி. மற்றவர்கள் என் கோட்பாடுகளை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் என்று நினைப்பவன் ஆத்திகனாக இருந்தாலும் சரி, நாத்திகனாக இருந்தாலும் சரி... இதைப் போன்ற கிணற்று நீர்தான். விஞ்ஞானி ஒரு நதி. ஓடிக்கொண்டேயிருக்கும் அந்த நதியில் கூவம் இருக்கலாம். காவிரியும் கங்கையும் கூடக் கலக்கலாம். இவை அத்தனையையும் மீறி தனக்கென்று தனிப் பெயரையும் பாதையையும் பண்பாட்டையும் பல நதிகள் உருவாக்குகின்றன.

விஞ்ஞானியானவன் அறிவைத் தேடித் தன் ஆராய்ச்சிப் பயணத்தைத் தொடர்கின்றான். இந்தத் தேடல் சங்கமிக்கிற கடல் ஆத்திகமா? இல்லை நாத்திகமா? கடவுள் இருக்கிறாரா இல்லையா? என நிஜமாகவே நாம் தெரிந்து கொள்ள விரும்பினால் இந்த விஞ்ஞானிகளின் அறிவியல்பூர்வமான வாழ்க்கை என்ன சொல்கிறது? காலப் பக்கங்களைப் புரட்டுவோம். புகழ்பெற்ற லூயி பாஸ்டர் நாம் எல்லோரும் அறிந்த மாமேதை. நோய்கள் கிருமிகளால் பரவுகின்றன என்பதை முதலில் கண்டறிந்தவர் அவர்தான். அந்த அடிப்படையில் நோய்களுக்கான தடுப்பு ஊசிகளை அவர் கண்டு பிடித்தார். அம்மை, காலரா,காச நோய் போன்ற தொற்று நோய்களில் இருந்து நம்மைக் காப்பாற்றுபவை அவருடைய ஆராய்ச்சியின் அடித்தளத்திலே உருவான படைப்புகள் தாம். 1880-ல் காலரா நோயைத் தடுப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் லூயி பாஸ்டர். காலரா நோய்க் கிருமிகளைக் கோழிக்குஞ்சு சூப்பில் போட்டு வளர்த்தார். அந்தச் சூப்பை கோழிகளுக்குக் கொடுப்பார். அந்தக் கோழிகளும் காலரா நோய் வந்து மரணமடையும். ஒவ்வொரு நாளும் பழைய சூப்பைக் கொட்டிவிட்டுப் புதிய சூப்பிலே நோய்க் கிருமிகளை அவர் வளர்ப்பார். ஒரு நாள் பாத்திரத்திலே இருந்த சூப்பை மாற்ற மறந்து விட்டார் லூயி பாஸ்டர். அந்த மறதி பல நாட்களுக்குத் தொடர்ந்தது. திடீரென நினைவு வர அந்தப் பழைய சூப்பை அவர் கோழிகளுக்குக் கொடுத்தார். ஆச்சரியம்! வழக்கத்துக்கு மாறாக கோழிகள் சாகவில்லை. அதிசயத்துக்குமெல் அதிசயம்! இறந்துவிட்ட நோய்க்கிருமிகளை உடலில் ஏற்றுக் கொண்ட கோழிகளுக்கு காலரா நோயைத் தடுக்கும் எதிர்ப்புச் சக்தி வந்து விட்டது. தன் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார் லூயி பாஸ்டர். தடுப்பு ஊசிகளின் தந்தையாக, மனித குலத்தைக் கொடிய நோய்களின் கோரப் பிடியிலிருந்து காப்பாற்றி வரலாற்றிலே தன் முத்திரையைப் பதித்தார். இந்த மகத்தான கண்டு பிடிப்புக்குக் காரணம் லூயி பாஸ்டரின் மறதி!.தானாகவே நடந்த ஒரு தற்செயல் நிகழ்வா? அல்லது மனித சக்தியை மீறிய மாபெரும் சக்தியின் திருவிளையாடலா?

பென்சிலின் மருந்து கண்டு பிடிப்பும் இப்படிப்பட்ட திருவிளையாடல்தான். 1928-ல் தொண்டையில் வருகிற தொற்று நோய்களைப் பற்றி அலெக்சாண்டர் பிலேமிங் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். தன் ஆராய்ச்சிக் கூடத்தில் சிறு கண்ணாடித் தட்டுகளில் நோய்க் கிருமிகளை அவர் வளர்த்தார். ஒரு நாள் இரவு. ஆராய்ச்சிக்கூடத்தின் ஜன்னலைச் சரியாக மூட அவர் மறந்து விட்டார். ஜன்னல் வழியாக வந்த தூசியும் குப்பையும் கண்ணாடித் தட்டுகளின் மேல் படிந்துவிட்டன. மறுநாள் காலை வந்த அவர் திடுக்கிட்டார். தட்டுகளின்மேல் நீலமும் பச்சையும் கலந்த ஒரு நிறத்தில் பூஞ்சைக் காளான் போல வளர்ச்சி! தன் கவனமின்மைக் காகத் தன்னையே அவர் நொந்து கொண்டார். தூக்கி எறிவதற்காகத் தட்டை எடுத்தார். அப்போது, பூஞ்சைக்காளான் போல் வளர்ச்சி இருந்த இடத்தில் மட்டும் நோய்க்கிருமிகள் வளராமல் இருப்பது அவருக்குத் தெரிந்தது. அந்த வளர்ச்சியில் உருவான நச்சுத்தன்மை கொண்ட ஒரு பொருள், நோய்க்கிருமிகளின் வளர்ச்சியைத் தடுப்பதை அவர் கண்டு பிடித்தார். அந்தப் பொருளுக்கு பென்சிலின் என்று பெயரிட்டார். பல நோய்களை எதிர்த்துப் போராட மருத்துவர்கள் பயன்படுத்தும் மாபெரும் கவசம் பென்சிலின். இதன் கண்டு பிடிப்புக்குக் காரணமான அலெக்சாண்டர் பலேமிங்கின் கவனக் குறைவு- சாதாரண நிகழ்ச்சியா அல்லது ஆண்டவனின் சித்து விளையாடலா?

1840-ம் ஆண்டில் எஸ்டெயில் (Esdaille) என்ற ஸ்காட்லாந்து நாட்டு அறுவைச் சிகிச்சை நிபுணர் இந்தியாவுக்கு வந்தார். பல ஆண்டு காலம் நம் நாட்டிலே தங்கி, ஏழை எளிய மக்களுக்கு மகத்தான மருத்துவ சிகிச்சை செய்தார். கண், காது, தொண்டை போன்றவற்றில் ஏற்படும் நோய்களுக்கான சிக்கலான பல அறுவைச் சிகிச்சைகளை அவர் செய்து நானூறுக்கும் மேற்பட்ட நோயாளிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றினார். என்ன ஆச்சரியம் என்று கேட்கிறீர்களா? அப்போது உணர்வுகளை மறக்கச் செய்யும் அனஸ்தீயா என்ற மயக்க மருந்து கண்டு பிடிக்கப்படவே இல்லை! அந்தக் கால மருத்துவக் குறிப்பேடுகளைப் பார்க்கும்போது அறுவை சிகிச்சையில் வலியே தெரியாமல் இருந்ததாக நோயாளிகள் குறிப்பிட்டுள்ளார்கள். நம்ப முடியவில்லையா? ஆனால் இந்தச் செய்தி முழுக்க முழுக்க உண்மை என்கின்றன மருத்துவ ஆதாரங்கள்.

சாதாரண மனித அறிவின் எல்லைகளுக்கு சவால் விடும் இதைப் போன்ற சம்பவங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ? அண்மைக் காலத்திலும் இதைப் போன்ற ஏராளமான நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. நம் நாட்டில் , குறிப்பாகக் கிராமங்களில் நாம் இன்றும்



மறு பக்கம் பார்க்கவும்

கல்லா கடவுளா?

பார்க்கிறோம். மஞ்சள் காமாலை, அம்மை போன்ற நோய்களுக்கு மந்திரங்கள் மூலமாகத் தீர்வுகாணும் வழக்கம் நிலவி வருகின்றது. இவை நிஜமாகவே பலன் கொடுக்குமா அல்லது ஏமாற்று வேலையா? நம்முடைய இன்றைய விஞ்ஞான, மருத்துவ அறிவு என்கிற அளவு கோல்களைத் தாண்டிய உண்மைகள் இந்தச் சிகிச்சை முறைகளிலே இருக்கலாம் என்ற சாத்தியக்கூறுகளை இன்று அறிவியல் உலகம் ஒப்புக் கொண்டு வருகின்றது. மந்திர உச்சாடனங்கள் அறுவைச் சிகிச்சையில் ஏற்படும் வலியைக் குறைக்கும் சக்தி கொண்டவையாக இருக்கலாம் என உலகப் புகழ்பெற்ற கொலம்பியா பிரெஸ்பிட்டேரியன் இதய அறுவைச் சிகிச்சை நிலையத்தின் இயக்குனரான டாக்டர் மெஹ்மட் ஓஸா டைம் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இப்போது அங்கு இதய அறுவைச் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு 90 நிமிடங்கள் ஓடக்கூடிய மந்திரங்கள் கொண்ட கசெட்டை ஒலிக்க விடுகிறார்கள். வலியைக் குறைக்கவும் குறுகிய காலத்தில் உடல் நலம் பெறவும் இந்த காசெட்டுகள் பயனளிப்பதாக ஓஸாவின் துணை டாக்டர்கள் மற்றும் நோயாளிகள் நம்புகிறார்கள்.

இந்த மாதிரியான மருத்துவ புதிர்களுக்கு நம் இன்றைய காலகட்ட அறிவின் எல்லைகளைத் தாண்டிய கேள்விகளுக்கு பதில்கள் உண்டா? அறிவியல் வல்லுனர்களும் மருத்துவ மேதைகளும் மனோதத்துவ நிபுணர்களும் சொல்கிற விளக்கம் இதுதான்: மனித மனதிலே மூன்று நிலைகள் இருக்கின்றன. அவை: உணர்வு மனம் (Conscious Mind), ஆழ் மனம் (Subconscious Mind), உயர்வுமனம் (Master Mind). இவை எப்படிச் செயல்படுகின்றன? நாம் சாதாரணமாக மனம் என்று சொல்வது உணர்வு மனத்தைத்தான். இதைத் தாண்டிய நிலை-ஆழ்மனம். நம்முடைய உள்ளார்ந்த எண்ணங்கள், ஆசைகள், விருப்பு வெறுப்புகள் எல்லாமே இந்த மனநிலையின் உருவாக்கங்கள்தாம். ஆழ்மனம் நிஜமாகவே ஒரு குரங்கு. இதை ஆட்டம் காட்டக் கற்றுக் கொண்டு விட்டால் நினைத்ததை எல்லாம் சாதிக்க முடியும். அறிதுயில் நிலை என்கிற ஹிப்னாட்டிஸம் ஆழ்மனத்தை ஆட்டிவைப்பதுதான். ஆழ் மனத்திலே நாம் ஆசைக்கனவு விதைகைளைத் தூவினால் அவற்றை விருட்சங்களாக்க முடியும் என மனிதவளத்துறை அறிஞர்களின் ஆராய்ச்சிகள் நிருபித்துள்ளன. உயர்வுமனம் என்பது ஆழ்மனத்தையும் தாண்டிய மனநிலையாகக் கருதப்படுகிறது. காலம் காலமாக மனித குலம் சேர்த்திருக்கும் அளவிடமுடியாத அறிவுச் செல்வம் ஒலியலைகளாக பிரபஞ்சத்தைச் சூழ்ந்திருக்கிறது.

காந்த சக்தி பற்றி நம் எல்லோருக்குத் தெரியும். எதிர் எதிர் துருவங்கள் ஒன்றை ஒன்று வசீகரிக்கும். வடதுருவத்தை தென் துருவம் ஈர்க்கிறது. அதைப்போல தென்துருவத்தை வடதுருவம் ஈர்க்கிறது. மனநிலையைப் பொறுத்தவரையில் இதற்கு எதிர்மறையான நடப்புநிலை! நம் உணர்வு மனதிலோ, ஆழ்மனத்திலோ ஆக்கபூர்வமான சிந்தனைகள் இருந்தால் பிரபஞ்சத்தில் இருக்கும் உயர்வுமனம் அந்த மனிதன் அறியாமலேயே அவனுக்குத் தன் அறிவுச் செல்வத்தை வழங்குகின்றது. இந்த உயர்வு மனமே இறை, கடவுள் என்கிறது ஆத்திகம். நம்மில் பலர் இத்தகைய அனுபவங்களைச் சந்தித்திருக்கிறோம். விழித்திருக்கும் வேளையில் பல பிரச்சனைகளை நாம் எதிர்கொண்டிருப்போம். அவற்றுக்கு எப்படித் தீர்வு காண்போமோ என்ற அச்சத்தோடு படுக்கப் போயிருப்போம். காலை எழும்போது நம்மை அறியாமலே கனவில் வந்தது போல பிரச்சனைக்குத் தீர்வுகள் நமக்குத் தெரியும். ஒருமுகப்படுத்தப்பட்ட ஆழ்மனச் சிந்தனைகள், பிரபஞ்சத்தின் உயர்வு மனதிலிருந்து தீர்வுகளை ஈர்க்க முடிந்ததுதான் இதற்குக் காரணம்!

நோபல் பரிசு பெற்ற மாபெரும் விஞ்ஞானி பியூரி க்யூரி சொன்னார்: விஞ்ஞானம், ஆராய்ச்சி, படிப்பு ஆகிய அத்தனை முயற்சிகளுமே ஆண்டவா உன் அழியாத இரகசியங்களை எங்களுக்குக் காட்டு என நாம் வேண்டிக்கொள்கிற பிரார்த்தனைகள்தாம். பணிவோடு தன்னை வேண்டுவோருக்கு இறைவன் தன் இரகசியங்களை வெளிக்காட்டுகிறான், நினைத்துப் பாருங்கள்! வாழ்க்கை முழுக்க அறிவியல் ஆராய்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்த ஒரு மாபெரும் விஞ்ஞானியின் தீர்ப்பு இது! லூயி பாஸ்டர், அலெக்சாண்டர் பிலேமிங், எஸ்டெயில் ஆகியோர் வாழ்வில் நடந்த இனிய விபத்துக்கள் பகுத்தறிவு பதில் சொல்ல முடியாத ஆச்சரிய நிகழ்வுகள் நம் அளவுகோல்களால் முழுக்கப் புரிந்து கொள்ளவே முடியாத மாபெரும் சக்தி ஒன்று இருக்கிறது என்பமை வெளிப்படுத்துகிறது. நம்மை நாமே முழுக்க அறிந்து கொள்ளவும், அந்த சக்தியை ஓரளவு புரிந்து கொள்ளவும், அந்த மகாசக்தி மட்டுமே அருளமுடியும்!

S.P. Moorthy

-நன்றி சக்தி விகடன்

பீமன் புகட்டிய பாடம்

தருமர் இந்திரப்பிரஸ்தத்தை ஆண்ட சமயம் பிராமணர் ஒருவர் அவரைக் காணவந்தார். அவரைச் சந்தித்த பின்னர் அந்த பிராமணர் திரும்பிச் சென்றார். பிராமணர் வெறும் கையுடன் திரும்பிப் போவதை அவதானித்த பீமன் அவரைத் தடுத்து நிறுத்தி ஐயா, நீங்கள் எமது சகோதரர் தருமரைச் சந்திக்கவில்லையா? என்று கேட்டான். அதற்கு அந்த பிராமணர், நான் தருமரைச் சந்தித்தேன். நான் கேட்ட பொருள் அவரிடம் தற்போது இல்லை. அதனால் நாளை வரச் சொன்னார் என்று தெரிவித்தார். அதனைக் கேட்ட பீமனுக்கு பெரும் ஆச்சரியம். தருமர் உடனடியாகச் செய்யவேண்டிய ஒரு நல்ல காரியத்தை பிற்போட்டு விட்டாரே என்ற வருத்தமும் அவனுக்'ல் இருந்தகு ஏற்பட்டது. சிறிது நேரம் சிந்தித்த அவனுக்கு புன்சிரிப்பு ஏற்பட்டது. மாளிகை வாசலுக்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த முரசத்தை பலமாக அடித்தான். மாளிகை வாசலில் இருக்கும் முரசு வழக்கமாக அடிக்கப்படுவதில்லை. அதிமுக்கியமான விடயம் ஒன்றை எல்லோருக்கும் அறிவிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால் மாத்திரமே அந்த முரசு அறையப்படுவது வழக்கம். பிரதான வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் முரசு அறைந்ததும் அரன்மைனயில் உள்ள அனைவரும் உடனடியாக வாசலில் கூடவேண்டும் என்பது விதி. வீமனது பலம் வாய்ந்த கைகள் முரசை அறைந்த போது எழுந்த ஒலி அரன்மனைச் சுவர்களில் பட்டு எதிரொலித்தது. முரசு அறையப்படும் சத்தம் கேட்டதும் மணிமண்டபத்தில் அமர்ந்திருந்த தருமர் அவ்விடத்திற்கு விரைந்து வந்தார். சமையல் கட்டிலிருந்த துரௌபதி வந்தாள். அர்ச்சுனன் தனது வில்லை சுவரில் சாய்த்து வைத்து விட்டு ஓடோடிவந்தான். நகுல, சகாதேவர்கள் தங்கள் கைகளில் இருந்த ஓலைச் சுவடிகளைக் கைவிட்டு வந்தார்கள். விரைவில் சிறு கூட்டம் ஒன்று கூடிவிட்டது. இருந்த போதிலும் பீமன் முரசை தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தான். தருமர் அவனிடம் சென்றார். முரசு அடிப்பதை நிறுத்தச் சொன்னார். நாம் எல்லோரும்தான் இங்கு வந்து விட்டோமே அதனால் முரசை அடிப்பதை நிறுத்து. எதிற்காக அழைத்தாய் என்பதைக் கூறு என்று தெரிவித்தார். அவரை வணங்கிய பீமன் அங்கிருந்த அனைவரையும் பார்த்து, நான் இங்கு அழைத்தது முக்கியமான விடயத்தைத் தெரிவிப்பதற்கே. எமது அண்ணர் பெரும் வெற்றி ஒன்றை இன்று பெற்றிருக்கிறார். அவர் பெற்ற வெற்றியை நாம் எல்லோரும் கொண்டாட வேண்டாமா? அதனால் தான் அழைத்தேன் என்று தெரிவித்தான். பீமன் கூறியதைக் கேட்ட தருமருக்கு வியப்பு. நான் இன்று மாளிகையை விட்டு வெளிச்செல்லவில்லையே? அதனால் எந்த வெற்றியைப் பற்றி பீமன் குறிப்பிடுகின்றான் என்பது அவருக்கு விளங்கவில்லை. அதனால் அவர் பீமனைப் பார்த்து, பீமா, என்ன சொல்கிறாய்? நான்தான் எந்தச் சண்டையிலும் ஈடுபடவில்லையே? பின்னர் என்ன வெற்றி என்று கேட்டார். தருமர் கூறியதைக் கேட்ட பீமன் சிரித்தான். அங்கிருந்தவர்களைப் பார்த்து, எங்களின் அண்ணர் சாவை வென்றுவிட்டார். தன்னிடம் யாசகம் கேட்க வந்த பிராமணரிடம் நாளை வரச் சொல்லி இருக்கிறார். அதனால் நாளை வரை உயிருடன் இருப்பார் என்பதை எமது அண்ணர் நூற்றுக்கு நூறு சதவீதம் நம்புகின்றார் என்று தெரிவித்தான். தான் தவறு இழைத்து விட்டது தருமருக்குத் தெரிந்தது. பீமனைப் பார்த்து, பீமா நான் தவறு இழைத்து விட்டேன். நல்ல விடயத்தை பிற்போடக் கூடாது என்று கூறிவிட்டு அவரை அழைத்துச் சென்று பொன்னும் பொருளும் தந்தார். பிராமணன் மனநிறைவுடன் அங்கிருந்து சென்றார்.











ஜிம் கரிஜியானிஸின் மனித நேயம்



ஸ்காபுரோ-ஏஜின்கோர்ட் நாடாளுமன்ற உறுப்பினரும் கனடா போக்கு வரத்து அமைச்சின் நாடாளுமன்ற செயலாளருமான திரு.ஜிம் கரிஜியானிஸ் இலங்கை சென்று வடகிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்டவர்களை நேரில் சந்தித்தார். அவரது மனித நேயத்தை ஓம் இதழ் போற்றுகின்றது. கடந்த வாரம் கனடா திரும்பிய அவரை விமானநிலையத்தில் ஸ் காபுரோ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதமகுரு விஜயகுமாரக்குருக்கள், வீடு விற்பனை முகவர் திரு.பஞ் சொக்கலிங்கம், நிதி ஆலோசகர் திரு.றொம் திருக்குமார் ஆகியோர் மாலை மாலை அணிவித்து வரவேற் பதை படத்தில் காணலாம்.

கடவுள் நம்பிக்கையும் மத வழிபாடும் அவசியமா? என்ற கேள்விக்கு காஞ்சி மகாபெரியவர் தந்த பதில்:

இலக்கை நிர்ணயித்துக் கொள்ளாமல் பயணம் செய்வது சாத் தியமில்லை. வாழ்க்கைக்கு இலக்காக கடவுள் ஆனார். பயணத் திற்குத் தேவையான தோணி மதம் ஆயிற்று. வாழ்க்கைப் பயணம் சிறப்பாகவும், எளிமையாகவும் நடைபெறுவதற்கு இவை தேவைப்பட்டன. பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்த மிகப் பெரிய புரட் சியாளர் வால்டேர், இவர் நாத்திகரும்கூட, கடவுள் என்கிற ஒன் று இல்லாவிட்டாலும், சமுதாயத் தேவைக்காக அதை கற்பனை செய்து கொள்வதில் தவறில்லை எனச் சொன்னார். கடவுளும் மதமும் சமுதாயத்தை நெறிப்படுத்த தேவையாக இருக்கின்றன. கடவுள், மதம் இரண்டையும் ஏற்காமல் ஒருவன் உன்னதமான, ஒழுக்கம் நிறைந்த, மனிதாபிமானமிக்க வாழ்க்கை வாழ்கிறான் என்றால் அது வரவேற்கக் கூடியது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்கிறவன் வையத்துள் வைக்கப்படும் எனச் சொன்னார் வள் ளுவர். உலகத்தில் வாழ வேண்டிய முறைப்படி வாழ்கிறவன் தெய்வத்துக்குச் சமமானவன் ஆகிவிடுகிறான்.

P.KAYILASANATHAN, B.A, LL.B.
Barrister and Solicitor

சட்டம் சம்பந்தமான உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக...

- குற்றவியல் வழக்குகள்
- குடிவரவு அகதி நிலை விண்ணப்ப விசாரணைகள்
- மேன்முறையீடுகள்
- மனிதாபிமான அடிப்படை விண்ணப்பங்கள்
- ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
- வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
- குடும்ப விவகாரங்கள்
- வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்
- வாகன விபத்துகள் தொடர்பான ந்'டஈடு கோருதல்

2401 Eglinton Ave. E.
Suite #302
Scarborough, Ontario
M1K 2M5

Phone : (416) 752-9561
Fax : (416) 752-7262

JetSpeed TRAVEL

IATA TICO ATAC

Murali Mahalingam
Travel Consultant

5800 Sheppard Ave. East, Suite # 12
Scarborough, ON M1B 5J7
Tel: 416-609-0544
Fax: 416-332-0082
Toll Free: 1-877-337-7333
E-mail : murali@jetspeedtravels.ca
www.jetspeedtravels.ca



ESTD 1991

Authentic south Indian restaurant

Come and celebrate with our special 14th Anniversary menu

MADRAS PALACE
SOUTH INDIAN CUISINE

1249 Ellesmere Rd
Scarborough ON
Canada M1P2X8



TEL / FAX : (416)759 -5400

Experienced craftsmanship passion; the key ingredients is our success



Buying or Selling A Home

FREE
- Market Evaluation
- Mortgage Information
- Real Estate Consultation

Life Insurance
Children's Education Funds

V. Sugunanathan (Sugunan)
Sales Representative
சுகுணன்

Century 21

Cell: 647 - 273 - 3184
Tel: 416 - 290 - 1200
Fax: 416 - 290 - 1900

AFFILIATE REALITY INC.
80, Corporate Drive, Suite 208, Toronto, ON M1H 3G5

ஸ்காபுரோவில் செல்வச்சந்நிதியான்



Brimley & Goldengate Court, Unit #1
Cell : (416) 731 - 8453 / (905) 566 - 1718



சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்களை னு.லு.ே நுழிழசவ ஐஉெ. உரிமையாளர்கள் திரு.திருமதி நந்தகுமார் தம்பதிகள் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். தாங்கள் அனுப்பிய பொருட்களின் பட்டியலை அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கனடா பிரதிநிதி திரு. முருகேசு சண்முகநாதனிடம் கையளிப்பதை படத் தில் காணலாம்.

Thirukural - A sacred text in Tamil

தமிழ் மறை திருக்குறள்

The word "Kural" in Tamil refers to a two-lined verse (couplet). Hence, Thirukural means a "holy two lined verse". The appeal of Thirukural is universal. It is also the only Tamil work translated into almost all the languages in the world. Although Thirukural is an ancient text written about 2000 years ago, it has never more relevant to modern life. George Uglox Pope (1820-1908), a Christian missionary of British origin, whose epitaph bears the line 'a student of Tamil" translated Thirukural into English. We are serializing selected Kurals along with G.U. Pope's translation with our commentary. It is our hope that the reader will be motivated to learn the Thirukural in its entirety.

Man faces many problems in life. At times he is upset by the shear weight of them. The saint-poet Thiruvalluvar who composed the Kurals says that a man's problems will be solved and his life will flow smoothly only if he takes shelter in God. This is the gist of the first chapter of Thirukural.

எல்லா மதத்தினரும் உரிமை கொண்டாடும் தமிழ் மறை திருக்குறள். 133 அதிகாரங்களைக் கொண்டது. 1330 குறள் பாக்களை உடையது. முதலாவது அதிகாரத்தில் இருந்து ஐந்து குறள்கள்.

குறள் 1 / Kural 1

அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
பகவன் முதற்றே உலகு.

ஏழுத்துக்கலெல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருக்கின்றன. (அரிச்சுவடி ஆனாவில் இருந்து ஆரம்பமாவது) அதுபோல, உலகம் கடவுளை முதல் வனாகக் கொண்டுள்ளது.

A, as its first of letters, every speech maintains;
The "Primal Deity" is first through all the world's domains.

As the letter A forms the basis of all other letters- the alphabets, the eternal God is the source of the world.

குறள் 2 / Kural 2

கற்றதனால் ஆய பயன்என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

மெய்யறிவுடைய இறைவனின் நல்ல அடிகளை வணங்காவிடத்து கல்வி கற்றதனால் பயன் என்ன? (ஒன்றுமில்லை).

No fruit have men of all their studied lore, save they the 'Purely Wise One's' feet adore.

What is the gain one will achieve by learning, if he does not worship the good feet of God, who is in the form of pure wisdom? (Nothing)

(Will be continued)

மனித வாழ்க்கை வாழ்தலும் வாழ வைத்தலும்

- புலவர் ஈழத்துச் சிவானந்தன்

மனித வாழ்க்கை கிடைத்தற்கரிய பேறு. இந்த வாழ்க்கை வாழ்வதற்கும் வாழ வைப்பதற்கும் உரியது. வாழ்க்கையை சிலர் வியாபாரம் ஆக்கிக் கொண்டார்கள். இதுவே துன்பங்களின் அத்திபாரம் ஆனது. நயம் வந்தால் இலாபம் வந்தால் மகிழவும், நட்டம் உண்டானால் துன்பமும் கொள்கிறார்கள். அன்பும் வியாபாரமாகி, அருளும் வியாபாரமாகி மனிதகுலம் அல்லல் படுகிறது. வாழ்க்கை வெறுக்கிறது- சலிக்கிறது என்பார்கள். இதனைப் போக்க அல்லது மறக்க மாற்று வழிதேடுகிறார்கள். குடிமயக்கங்களில் நாட்டம் பொண்டு அழிந்தும் போகிறார்கள்.

வாழ்க்கையை விளங்கி வாழ்பவர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் ஆடாமல் அசையாமல் சமசீர் கொண்டு நிலைத்து விடுகிறார்கள். இவர்களை சமசித்தம் கொண்டவர்கள் என்கிறது சிவநெறி. ஏமாப்பும் பிணியறியாப் பிறப்புடையோராக இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்று வாழ்பவர்களே உண்மையான சமய வாழ்க்கை வாழ்கிறார்கள்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே என்பது மாணிக்க வாசகரின் கூற்று. உண்பதும் உடுப்பதும் உறங்குவதும் வாழ்க்கை அன்று. வாழ்க்கையின் புறக் கூறுகள் இவை. உல்லாசமும் புறக்கூறாகும். விலை உயர்ந்த பொருட்கள் வாழ்க்கையின் அடையாளம் அல்ல. அவை பொருளாதாரத்தின் அடையாளம். பொருளாதாரத்தின் அடையாளத்தை வாழ்க்கையின் அடையாளமாகக் கொள்ள முடியாது. வாழ்க்கையின் அடையாளம் அகமகிழ்வில், பிறரை மகிழ வைப்பதில், பிறரை திருப்திப்படுத்துவதிலும், பிறருக்கு தொண்டு செய்வதிலும், அன்பு செய்வதிலும் தங்கியிருக்கிறது. மனிதனின் பரிணாம வளர்ச்சி கூடி மகிழ்ந்து வாழ்தலாக மலர வேண்டும்.

மனிதனுடைய தொடக்க காலத்தில் அவன் வாழ்க்கை எப்படி இருந்தது. இன்று அது வளர்ந்து எந்த நிலையில் இருக்கிறது என்று ஆராய்வது ஒரு பயனுள்ள முயற்சியே. இந்த ஆய்வுக்கு தமிழ் நாட்டிலே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து மனிதனை அவதானித்துக் கருத்துக்கள் சொன்ன சங்கதேவன் என்ற கவிஞனின் அபிப்பிராயங்களை எடுத்துக் கொள்ளலாம். சங்கதேவன் மனித மனத்தின் ஆழத்தைத் தோண்டிப் பார்த்தவன் என்ற பெருமை பெற்றவன்.

ஆதிமனிதனின் முதல் மனநிலை என்ன? பசிவந்தால் உண்ண வேண்டும். கொடிய மிருகங்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். பெண்ணுடன் கூடி இன்புற வேண்டும். நாளைய தேவைக்குரிய பழங்களையோ, கிழங்குகளையோ தேடி வைக்க வேண்டும். தனக்குத் தீங்கு உண்டாகுமோ என்ற பயம். தீங்கு வந்தால் கோபம் கொள்வது. இவ்வளவுதான் அவனுடைய மனவளர்ச்சி.தன்நலம் உடையவனாகவும், தனது கவனம் கொள்பவனாகவும், இன்பம் தேடுபவனாகவும், தீங்கில் பயமும், அதை எதிர்கும் கோபம் உடையவனாகவும் இருந்தான். மிருகத்திலிருந்து அதிகம் மாறுபடாதவனாகவும், நாளைக்கு என்று எதையாவது தேடிச் சேர்க்கும் எண்ணத்தில் சிறிது மிருகத்திலிருந்து வேறுபட்டவனாகவும் இருந்தான். சங்கத்தேவனின் கருத்து மனிதனாகப் பிறந்தவன் என்பது மட்டுமே இன்னும் மனிதம் உடைய மனிதனாக வளர்ச்சியடைய வாய்ப்பு உள்ளது என்ற கருத்தும் இவற்றில் அடங்கும்.

வேலை அற்றவனாகச் சுற்றித்திரிந்த ஆதிமனிதன் பூத்துக்குலுங்கும் மரங்களைக கண்டான். சலசலத்து ஓடும் நீரோட்டத்தைப் பார்த்தான். பறவைகளையும் கன்றுக்குப் பால் ஊட்டும் பசுக்களையும், குஞ்சுக்கு உணவூட்டும் தாய் பறவையையும் தன்னைக் கண்டதும் பயந்தோடும் மான்களையும் பார்க்கின்றான். இப்படிப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அழகு உணர்ச்சி உண்டாகியது. இவை அவனுக்கு ஆச்சரியத்தையும் வியப்பையும் கொடுத்தன. தன் மனத்தைக் கவர்ந்தவைகளை தன்வாயை அசைத்து ஓசை உண்டாக்கி பாராட்டினான். அழகுணர்ச்சியும் வியப்பும் பாராட்டும்தான் மனிதனை மிருகங்களிடத்திலிருந்து பிரித்துக் காட்டின என்கிறான் சங்கத்தேவன்.

மனிதனுடைய இரசனை அவனை ஆனந்தக் கூத்தாடவும் செய்தது. இவனைப் பார்த்த இன்னொரு மனிதன் கைதட்டிப் பாராட்டினான். ஆடியவனைப் பார்த்து வியந்ததோடு தானும் அவனோடு சேர்ந்து கூத்தாடினான். பிற மனிதன் தன்னைப் பார்த்து குதூகலித்தபோது மனிதனுக்கு புகழ் உணர்ச்சி உண்டாகியது. அழகுணர்ச்சியும், புகழ் உணர்ச்சியும் தான் மனித மனத்தின் அடிப்படையாகும். புகழ் பாராட்டு இவைகளை மனிதன் மதிக்க வேண்டும் என்று நினைத்ததே கடவுள் சித்தம்தான். மனிதன் மிருகத்திலிருந்து வேறுபட்டவுடன் கடவுள் அவனை உலக நிர்வாகத்திற்கு பொறுப்பு ஆக்கினான்.

பெண்ணை அழகுணர்ச்சியோடு நெருங்கிய மனிதனுக்கு இன்பப் பொருளாயும், காலப் போக்கில் அன்புப் பொருளாயும் அவள் தோற்றம் கொண்டாள். பெண்ணுக்காக அவன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் துறக்கத் துணிந்த அற்புதம் மனிதவாழ்வில் வியத்தகு செயலானது. அழகும் அன்பும், தியாகமும் தவமும், இன்பமும் வீரமும், பாராட்டும் பொறுமையும், குறிக்கோளும் இலக்கியங்களும் எழுந்தன. இவற்றுள் ஆன்மீக உணர்வுகளைத் தட்டி எழுப்பக் கூடிய இராமாயணமும் பாரதமும் மனிதகுலத்துக்கு வாழ்க்கையை செப்பனிட உதவும் காவியங்களாயின.

ஒரு காவிய கதாநாயகனின் பண்பு பல மனிதர்களை மனித வாழ்க்கைக்குரியவர்களாக மாற்றி இருக்கிறது. மனிதனை மனிதம் என்னும் உயர் பண்புடையவனாக மாற்றுவதில் சமயம் சார்ந்த கடவுளும் காவியங்களும் இலக்கியங்களும் உதவியிருக்கின்றன. கடவுளும்- கலையும் - இலக்கியங்களும் வாழ்க்கையை சீர்படுத்திய அம்சங்களாகும். ஒருவருடைய நல்வாழ்வுக்கு எண்ணமும் நினைப்பும்தான் முதல் காரணம் என்பதை இலக்கியங்கள் வலியுறுத்தின.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்.

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

என்ற திருக்குறள்கள் மனித எண்ணங்களின் வலிமையைப்பற்றி கூறுகின்றன. மனித வாழ்க்கையில் ஆன்மீக ஆதரவுப் பணிக்கு மனிதனின் ஆதிவாழ்விலிருந்து இன்றைய வாழ்வு வரை கண்ணோட்டத்தைச் செலுத்துவது பயனுள்ளதாகும். ஆன்மீக ஆதரவுக்கு மனப்பண்பும், நெகிழ்வும், முக்கிய கூறுகளாகும். சமய அடித்தளத்தோடு காவிய இலக்கியச் சிந்தனைகளும் கலைகளின் இரசனையும் ஆடுதல், பாடுதல், பேசுதல், அரவணைத்து ஆறுதல்படுத்தி திருப்திப்படுத்துவதை இன்றைய காலத் திரைப்படம் ஒன்று கட்டிப்பிடி வைத்தியம் எனக் கூறியதை நோக்க வேண்டும். இவ்வாக்கியத்தில் நகைச் சுவையை மட்டும் காண்பவர்கள் நயமான ஆதரவுப் பணியை மறந்து விடுவார்கள்.

Hindu Religion

Hindu Religion is the world's oldest faith. It was followed by the ancient civilization of the Indus valley, Ganges valley, Deccan and Cauveri delta, as well as other parts of India all over the Indian peninsula and surrounding areas of Asia. This Faith, known by many names, is followed and practiced in several ways and forms as it was practiced several thousand years back, with very little modifications, though it adjusted itself to the various times.

Nearly one Billion Hindus

There are over 900 million to one Billion Hindus living throughout the world, mainly in India, Nepal, Sri Lanka, Malaysia, Singapore, Thailand, Cambodia and Indonesia from ancient times and also the Hindus settled all over the world now. There are also many new converts and followers to this practice in the modern world.

Way of Life

Hinduism is as much a "way of life" as a religion and affects every aspect of life for Hindus from birth throughout their life. It is followed by the devout Hindu in every aspect of life and activity, and not just in a prayer only.

A Religion without a Founder

Hinduism, unlike most religions, has no founder and no one scripture. Hindus do not have one "Holy Book" like many other religions, but many texts including the four Vedas along with their Upanishads, called the "Sruti", several Dharma Sasthras or Smrutis, Ithihasas and Puranas including the Mahabharata and the Ramayana. The Bhagavad Gita, or "Song of God", comes as part of Mahabaratha, is an essence of the message of the Upanishads and Hindu Philosophy and is considered to be a guide on how we should live as told by Lord Krishna to Arjuna.

Hindus believe that as all streams and rivers lead to the same ocean, all genuine religious (spiritual) paths lead to the same goal; worship of every form of "GOD" and celestial forces leads to the same good. So they do not try to convert others to our religion. Each one is allowed to pray and worship to a form or a formless according to one's own knowledge, desire, need and and spiritual elevation.

Belief in One God

Hindus believe in One God, beyond form, space and time and beyond human comprehension. They believe that God is Transcendent and Immanent at the same time and will create itself according to everyone's desire and needs to protect the pious, to destroy the evil and establish the Divine Rule of Law and Justice. So, they believe that God will come to them in every form one desires and prays according to one's need and wish.

One God in different forms

Most Hindus, needing a form on which to concentrate, worship that one God in different forms, worshiping one aspect of that One Divine Supreme Truth - Paramatma. -- Hindus see God in masculine as well as in feminine forms and also like a family. At the same time, they all understand the True nature of the Supreme.

In the masculine forms, Hindus see that One God as Brahma - the creator, Vishnu - the protector and maintainer, and Shiva as Siva-Nataraja - the destroyer and recreator. -- In the female forms, Hindus see that One God as Sakthi or Durga, - provider of energy and power, as Lakshmi, - provider of prosperity and wealth and as Saraswathi, - provider of knowledge and intelligence.

These are the major forms of Hindu "Gods" worshipped, which takes the form as created by the supreme God Paramathma for the benefit of the Human creations to easily comprehend Him as He is. Please understand that many of the sects of Hindus following the various forms of philosophy and worship, visualise this same Paramathma - the Supreme God - as Narayana [Vishu], or as Paramasiva [Siva] and Paraasakthi [Sakthi or Durga].

Here please note that unlike the other major world religions, Hindus also see the Supreme as Mother, including as Sri Meenakshi, as Visalakshi, as Kamakshi and as many other names of Sakthi. He is also seen as Father as in Siva in various forms in several Hindu Temples. -- The Temple in which they are worshipped is not just a congregation hall but a palace of the Supreme God [as the Queen or King].

Hindu Worship

Hindu worship takes into account the



capacities and inclinations of different individuals. --Types of worship include Ritualistic worship (temple or home), offering (directly or through the priest) flowers, coconut, fruits, incense, flames of oil lamps and camphor, chanting of prayers in Sanskrit (or their mother tongue), etc.

Also: Worship through service of one's fellow man (charity) and by one's activity; -- Worship through studying of sacred texts and devotion to the Supreme; -- Worship through meditation with physical and mental discipline and through understanding first the inner self then the divine that is everywhere. -- Worship and prayers are the duties of the human soul to attain Divine protection from the effects of bad karmas and to get guided in the proper path.

Hindus believe in Ahimsa, or non-violence, which is the basis for the vegetarian diet of many Hindus. Hindus believe non-injury or Ahimsa in all activities, which includes thought, word, and deed. Hindus believe in Truth and that the Truth will ultimately prevail and protect. Hindus believe in following the Dharma or the divine Law that will protect them at all times.

Hindus believe in Karma, the law of Cause and Effect. Similar to Christian "As ye sow, so shall ye reap" or "What goes around, comes around." (No such thing as a free lunch.) -- Hindus strive to follow Karma Yoga which is Doing one's own duty without expectation of any rewards for it.

Turn to page 34

Quest For God By Swami Vivekananda

O'ver hill and dale and mountain range,
In temple, church, and mosque,
In Vedas, Bible, Al Koran
I had searched for Thee in vain.

Like a child in the wildest forest lost
I have cried and cried alone,
"Where art Thou gone, my God, my love?
The echo answered, "gone."

And days and nights and years then passed
A fire was in the brain,
I knew not when day changed in night
The heart seemed rent in twain.
I laid me down on Ganges's shore,
Exposed to sun and rain;
With burning tears I laid the dust
And wailed with waters' roar.

I called on all the holy names
Of every clime and creed.
"Show me the way, in mercy, ye
Great ones who have reached the goal."

Years then passed in bitter cry,
Each moment seemed an age,
Till one day midst my cries and groans
Some one seemed calling me.

A gentle soft and soothing voice
That said 'my son' 'my son',
That seemed to thrill in unison
With all the chords of my soul.

I stood on my feet and tried to find
The place the voice came from;
I searched and searched and turned to see
Round me, before, behind,
Again, again it seemed to speak
The voice divine to me.
In rapture all my soul was hushed,
Entranced, enthralled in bliss.

A flash illumined all my soul;
The heart of my heart opened wide.
O joy, O bliss, what do I find!
My love, my love you are here
And you are here, my love, my all!

And I was searching thee -
From all eternity you were there
Enthroned in majesty!
From that day forth, wherever I roam,
I feel Him standing by
O'ver hill and dale, high mount and vale,
Far far away and high.0

The moon's soft light, the stars so bright,
The glorious orb of day,
He shines in them; His beauty - might -
Reflected lights are they.
The majestic morn, the melting eve,
The boundless billowing sea,
In nature's beauty, songs of birds,
I see through them - it is He.

When dire calamity seizes me,
The heart seems weak and faint,
All natures seems to crush me down,
With laws that never bend.
Me seems I hear Thee whispering sweet
My love, "I am near", "I am near".
My heart gets strong. With thee, my love,
A thousand deaths no fear.
Thou speakest in the mother's lay
Thus shuts the babies eye,
When innocent children laugh and play,
I see Thee standing by.

When holy friendship shakes the hand,
He stands between them too;
He pours the nectar in mother's kiss
And the baby's sweet "mama".
Thou wert my God with prophets old,
All creeds do come from Thee,
The Vedas, Bible, and Koran bold
Sing Thee in Harmony.

"Thou art," Thou art" the Soul of souls
In the rushing stream of life.
"Om tat sat om." Thou art my God,
My love, I am thine, I am thine.

பஞ்சபுராணம்

திருமுறை பதிகங்களினால் இறைவனுக்குச் சாத்தப்படும் மாலையே பஞ்ச புராணம். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் ஆகியவையே பஞ்சபுராணத்தில் அடங்கினாலும் திருப் புகழையும் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

தேவாரம்

திருவே என் செல்வமே தேனே வானோர்
செழுச் சுடரே செழுச்சுடர் நற்சோதீ மிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோய் அணுகாவண்ணம்
ஆவடுதண்டுறை உறையும் அமரர் ஏறே.

தமிழ் நாட்டில் மயியலாடுதுறை-கும்பகோணம் வீதியில் அமைந்துள்ளது திருவாவடுதுறை. நாயன்மார்கள் சம்பந்தர், சுந்தரர், அப்பர் ஆகியோர் பாடிப் பரவிய தலம். காவிரிக்கரையில் அமைந்துள்ளது. ஆ ஆடுதுறை பசுக்கள் ஆடுகின்ற துறை. திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன் மாசிலாமணீசுவரர். இறைவி ஒப்பிலாமுலையம்மை. அப்பர் பாடுகின்றார்: திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள இறவைா, என் திருவும் செல வமும் நீயே! தேன் போன்றவனே! நல்விளக்காகவும், அருட்பெருஞ் சோதியாகவும் விளங்குபவனே! என் உறவு, உடல், உள்ளம், உள்ளத் தில் தோன்றும் உணர்வு, கண், கண்ணின் கருமணி, அதனுள் ஆடும் பாவையே! வினையால் அடியேன் துன்புறாதவாறு காத்தருள் புரிக.

திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவதினியே.

மூவரது பாடல் பெற்ற தலம் சீர்காழி. தோணிபுரம் என்று அழைக்கப் படும் இத்தலத்தை மாணிக்கவாசகர் வணங்கிய போது அவருக்கு தில் லையம்பலத்தில் கூத்தவடிவில் திகழும் நடராசரின் நினைவு வரவே அதனை இறுகப்பிடிக்கும் சிந்தையினராய் இப்பதிகத்தைப் பாடினார். இப் பாடல் திருவாசகத்தில் பிடித்த பத்து என்ற பகுதியில் இடம் பெற்றுள் ளது. ""தாயும் தந்தையும் ஆனவனே! இணைற்ற ஞானச் சுடரே! அன் பெனும் கடலில் தோன்றிய அமுதமே! கடைத்தேறுவதற்கு உதவாத செயல் களில் ஈடுபட்டு காலத்தை அவமே கழிக்கும் புழுத்து அலைகின்ற இ ழிதகைமையை உடையவன் நான். சிவபெருமானே, இப்பிறவியிலேயே உன் னை உறுதியாகப் பற்றிக் கொண்டேன். என்னை விட்டு இனி எங்கெழுந் தருளுவது? அது முடியாத காரியம்.

திருவிசைப்பா

இடர் கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருட்பிழம்பு அற எறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூய நற் சோதியுட் சோதீ
அடல் விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மால் அறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே!

இந்த திருவிசைப்பாவைப் பாடியவர் திருமாளிகைத் தேவர். பொன்னம்பலத்தில் ஆடுபவனே! இடப வாகனனே! பிரமனும் விஷ்ணுவும் அடிமுடி காணாதவாறு பிழம்பாய் நின்றவனே! என் பிறவித் துன்பத்தை ஒழித்து என்னை ஆட் கொண்டாய். என் மனத்தினுள் இருந்த அஞ்ஞானத்தை அகற்றிய நல் லறிவாகிய சோதியனே! அடியவனாகிய யான் உன்னை இடையறாது வணங்கும் வண்ணம் நீ எனக்கு உன் திருவடிகளைக் காணும் உதவியைச் செய்தருள வேண்டுகின்றேன் என்கிறார் அவர்.

திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டர் உள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

இறைவனை வாழ்த்தி துதிக்கும் போது அதனால் எமக்கே பயன் ஏற்படுகின் றது. அந்தப் பயன் எம்மை நல்ல முறையில் வாழச் செய்யும் என்ற அறிவுரையைத் தரும் விதத்தில் இந்தப் பாடலை சேந்தனார் இயற்றியுள் ளார். சிறப்பித்துக் கூறப்படும் வேத சிவாகமங்களின் பொருளை நன்குணர் ந்த, தூய சிவத்தொண்டர்களே! செத்துப் பிறக்கின்ற பொய்யான வாழ் முதற் பொருளாகக் கொள்ளும் சமயங்களின் வழிச் செல்லாது, பொற் குவியல் போலத் திகழும் மேரு மலையை வில்லாகக் கொண்ட வரம்பில் ஆற்றல் உடையவனும், இடபத்தை வாகனமாகக் கொண்டவனும், ஆதியும் அந்தமும் இல்லாதவனுமாகிய சிவபெருமானை பல்லாண்டு வாழ்க என்று கூறிப் போற்றுவோம் என்கிறார்.

திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

அம்மையே என்று இறைவனால் அழைக்கப்பட்டவர் காரைக்காலம்மையார். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் தங்களது தேவார பதிகங்களைப் பாடுவதற்கு முன்னதாகவே இறைவனுக்குப் பாமாலை சாத்தியவர். இ றைவன் மீது கொண்ட அபார பக்தி அவரை ஆலங்காடு நோக்கி தலையாலே நடக்க வைக்கின்றது. அங்கு அவர் நடராஜரின் ஊர்த்துவத் தாண்டவத்தைக் கண்டு களிக்கின்றார். இறைவனை நோக்கி இனி நான் பிறவாதிருக்க வேண்டும். மீண்டும் பிறவி உளதாயின் உன்னை மறவாதிருக் கும் வரம் வேண்டும். நீ அருட்கூத்து ஆடும்போது நான் மகிழ்ச்சியுடன் பாடியபடி உன் திருவடியின் கீழ் இருக்க வேண்டும் என்று வேண்டுகிறார் என்று சேக்கிழார் தான் இயற்றிய காரைக்காலம்மையார் புராணத்தில் குறிப் பிடுகின்றார்.

திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல் பொரி
கப்பிய கரிமுகன் அடி பேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் என வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொருள் திரள் புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை ரதம்
அச்சது பொடி செய்த அதி தீரா

37th பக்கம் பார்க்கவும்

இம்மாதம் உங்களுக்கு எப்படி?

(2.01.05- 2.28.05) இராசி பலன் சோதிடமணி, சிவாச்சாரியமணி சிவஸ்ரீ விசுவநாத ரங்கநாத குருக்கள்

மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்

எதிர்பாராத முன்னேற்றங்கள் ஏற்படும். கஷ்டப்படும் அளவுக்கு தொழில் முன்னேற்றம் கிடைப்பது சிரமம். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் ஈற்றில் நன்மைகள் கிடைக்கும். குடும்ப நலன் நன்றாக இருக்கும். கூட்டுத் தொழிலில் படிப்படியான முன்னேற்றம் ஏற்படும். புதிய முயற்சிகள் நன்மையாக இருக்கும்.

மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் உண்டு. கார்த்திகை நட்சத்திரக்காரர்களுக்கு சோதனை கூடிய காலம்.

சிறப்பான நாட்கள்: 5,7,9
சோதனையான நாட்கள்: 4,6,11

இடபம்: கார்த்திகை 2,3,4ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ம் பாதம்.

தொழில் விஜயத்தில் அவதானம் தேவை. முயற்சிகளுக்கு ஏற்ப ஊதியம் கிட்டும். முக்கியமான எண்ண்ணங்கள் கைகூடும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மன நிம்மதி குறைவாக இருக்கும். அமைதி, பொறுமை மிக மிக அவசியம், புதிய முயற்சிகள் நன்மை தரும்.

மாணவர்களுக்கு கல்வி சிறப்பாக அமையும். ரோகிணி நட்சத்திரக்காரர்கள் அவதானமாக செயல்படவும்.

சிறப்பான நாட்கள்: 4,7,25
சோதனையான நாட்கள்: 5,13,28.

மிதுனம்: மிருகசீரிடம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதம்

துணிச்சலான முன்னேற்றங்கள் நன்மை தரும். தொழில் சிறப்பு, பணவருவாய் நன்றாக இருக்கும். குடும்பத்தில் முன்னேற்றங்கள் நிறைந்த காலம். கூட்டுத் தொழில் நன்மை தரும்.

மாணவர்களுக்கு கல்வி சிறப்பாக இருக்கும். புநர்பூச நட்சத்திரக்காரரர்களுக்கு சோதனை கூடிய காலம்.

சிறப்பான நாட்கள்: 5,7,17
சோானையான நாட்கள்: 28, 30

கடகம்: புநர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்

கடின உழைப்பு முன்னேற்றத்தைத் தரும். மனதில் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். உடல் நிறைய இடைக்கிடை சிறு பாதிப்பைக் கொடுக்கும். புதிய முதலீடுகள் தவிர்ப்பது நன்மை தரும். வெளிநாட்டு தொடர்பு, தனித் தொழில் நன்மை தரும்.

மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் தேவை. புநர்பூச நட்சத்திரக்காரர்கள் அமைதியாக செயல்படவும்.

சிறப்பான நாட்கள்: 3,10,15
சோதனையான நாட்கள்: 23, 28

சிங்கம்: மகம், பூசம், உத்தரம் 1ம் பாதம்

பலராலும் போற்றப்படுவீர்கள். தொழில் சிறப்பு, பணவருவாய் நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. குடும்ப நிலை சீராக இருக்கும். புதிய முதலீடுகளில் விழிப்புடன் இருப்பது நன்மை தரும். தொழில் சிறப்பாக இருக்கும்.

மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை. உத்தரம் நட்சத்திரக்காரர்கள் பொறுமையுடன் செயல்படவும்.

சுப நாட்கள்: 1,8, 17
சோதனை நாட்கள்: 26, 29

கன்னி: உத்தரம் 2,3,4ம் பாதம், அத்தம், சித்திரை 1,2ம் பாதம்

மனத் தைரியம், துணிச்சல் போன்றவை ஏற்படும். தொழில் சீராக இருக்கும். வழக்கு விடயங்கள் நன்மை தரும். சட்டத்துறையினர் வளர்ச்சி பெறுவார்கள். குடும்பத்தில் மனச்சஞ்சலம் ஏற்பட்டு மறையும். ஆனாலும் முன்னேற்றம் உண்டு. புதிய பொருட்கள் சேர்தல், முதலீடுகள் நன்மை தரும்.

மாணவர்களுக்கு கல்வி சிறப்பாக இருக்கும். சித்திரை நட்சத்திரக்காரர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது.

சுப நாட்கள்: 3,7,17
சோதனையான நாட்கள்: 25, 26

துலாம்: சித்திரை 3, 4ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ம் பாதம்

தொழில் சிறப்பு, பெரியோர் நன்மதிப்பு போன்றவை ஏற்படும். பொருளாதார நிலை சீராக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனாலும் ஈற்றில் நன்மையாக அமையும். குடும்பத்தில் மனச்சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.

மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் மேவை. விசாக நட்சத்திரக்காரர்கள் அமைதியாக செயல்படவும்.

சுப நாட்கள்: 9,11, 17
சோதனை நாட்கள்: 5, 24

விருச்சிகம்: விசாகம், 4ம் பாதம், அனு'ம், கேட்டை

மனதில் புதிய எண்ணங்கள் ஏற்படும். செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சிகள் நன்மை தரும். பிரச்சனைகள் தீர்ந்து மனதில் உற்சாகம் பிறக்கும். அயல் நாட்டு தொடர்புகள், கூட்டு தொழில் நன்மை தரும். மணவருவாய் சீராக இருக்கும். குடும்பத்தில் உறவு நன்றாக இருக்கும்.

மாணவர்களுக்கு சிறப்பான காலம். அனு'ம் நட்சத்திரக்காரர்கள் அவதானமாக செயல்படவும்.

சுப நாடகள்: 3, 9, 28
சோதனையான நாட்கள்: 6, 17

தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம
தற்போது தொடங்கும் காரியங்கள் படிப்படியான முன்னேற்றங்களை கொடுக்கும். தொழில் விடயத்தில் அமைதியாக செயல்படவும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதம் ஏற்பட்டு மறையும். கூட்டுத் தொழிலில் அவதானத்துடன் செயல்படவும்.

மாணவர்களுக்கு ஊக்கம் தேவை. பூராட நட்சத்திரக்காரர்களுக்கு சோதனைகள் ஏற்படும். அமைதியாக செயல்படவும்.

சிறப்பான நாட்கள்: 4,12,21
சோதனையான நாட்கள்: 8, 17, 23

மகரம்: உத்திராடம் 2,3,4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதம்

பொருளாதார நிலை சீராக இருக்கும். புதிய முதலீடுகள், புதிய சொத்துக்கள் நன்மை தரும். அந்நிய நாட்டு தொடர்புகள் நன்மையைக் கொடுக்கும். குடும்பத்தில் நன்மைகள் நிறைந்த காலம். தொழிலில் படிப்படியான முன்னேற்றத்தைக் கொடுக்கும். பணவருவாய் நன்றாக இருக்கும்.

மாணவர்களுக்கு நன்மையான காலம். திருவோண நட்சத்திரக்காரர்கள் அவதானமாக செயல்படவும்.

சுப நாட்கள்: 9, 13, 27
சோதனையான நாட்கள்: 25, 29

கும்பம்: அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதம்

உழைப்புக்கு உரிய பலன் கிடைக்கும். அந்நிய நாட்டு தொடர்புகள், புதிய முதலீடுகள் நன்மை தரும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. குடும்பத்தில் இடைக்கிடை மனச்சஞ்சலம் ஏற்பட்டு மறையும். பணவருவாய் சீராக இருக்கும்.

மாணவர்களுக்கு கல்வித் தடைகள் ஏற்பட்டு முன்னேற்றத்தைக் கொடுக்கும். பூரட்டாதி நட்சத்திரக்காரர்களுக்கு சோதனையான காலம்.

சுப நாட்கள்: 8, 29, 30
சோதனையான நாட்கள்: 3, 5, 7

மீனம்: பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி
எதிர்ப்புகள் விலகி நன்மைகள் நிறைந்த காலம். பொருளாதார நிலை சிறப்பாக அமையும். கொடுக்கல் வாங்கல் நன்மையைத் தரும். கடன் தொல்லைகள் குறையும். மனதில் இடைக்கிடை சஞ்சலம், மனக்கஷ்டட்டம் ஏற்பட்டு மறையம். குடும்பத்தில் ஒன்றுமை ஏற்படும்.

மாணவர்களுக்கு முன்னேற்றமான காலம். பூரட்டாதி நட்சத்திரக்காரர்கள் அவதானமாக செயல்படவும்.
சுப நாட்கள்: 2, 9, 15.
சோதனையான நாட்கள்: 4, 11, 23

ஓம்

ஸ்ரீ நாகபூஷணி அம்பிகா சமேத நாகலிங்கேஸ்வர சுவாமி தேவஸ்தானம்

இந்து ஆலயம் ஆன்மீகத்தை வளர்ப்பதுடன் கலை, கலாச்சாரம் போன்றவற்றையும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எழும்ப இருக்கின்றது ஸ்ரீ நாகபூஷணி சமேத நாகலிஸ்கேஸ்வர சுவாமிக்கான புதிய திருக்கோவில். இயற்கைச் சூழலில் நீர்நிலையுடன் கூடிய இடத்தில் அமையவிருக்கும் புதிய ஆலயத்தின் பூமிதானத்திற்கு நன்கொடை நிதிகள் கொடுத்து உதவுமாறு அன்பர்களிடம் வேண்டப்படுகின்றது.

தற்போதுள்ள ஆலயத்தில் தொடர்ந்து பூசைகள் இடம் பெற்று வருகின்றன. விசேட தினங்களில் சிறப்பான முறையில் பூஜை, அபிே‘கங்கள் நடக்கின்றன. தினமும் நாக தோஷ நிவர்த்திக்கான, சாந்தி பூஜைகள் நிகழப்பெற்று வருகின்றன. நாக தோ‘முடைய அடியார்கள் ஆலயத்தில் தொடர்பு கொண்டு தோ‘ பூஜை பரிகாரங்கள் செய்து கொள்ளலாம்.



ஓம் சக்தி

5637 Finch Ave. E, Unit 5A
Scarborough, Ontario.
M1B 5K9
Tel: 416-412-1289
Fax: 416-412-3826

நேபாளம்: ஒரு இந்து நாடு

உத்தியோகபூர்வமான இந்து நாடாக இருப்பது உலகிலேயே நேபாளம் ஒன்றுதான். 1990ம் ஆண்டு தற்போதைய அரசியல் அமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது நேபாளத்தை இந்தியா போன்று மதச் சார்பற்ற நாடாக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அரசியலில் இந்துக்களின் ஆதிக்கம் இருந்ததால் அரசியல் யாப்பு இறுதியில் நேபாளம் ஒரு இந்து நாடு என்று பிரகடனம் செய்தது. அந்நாட்டின் மக்கள் தொகையில் 85 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான மக்கள் இந்துக்கள். ஏனையோர் புத்த சமயிகள். எனினும் இரு மதங்களும் பெருமளவில் ஒன்றிணைந்து இருப்பதும் இரு சமய வணக்கத்தலங்களும் ஏறக்குறைய ஒரேவிதமான அந்தஸ்த்தைப் பெற்று இருப்பதையும் நேபாளத்தில் காண முடியும். இது அந்த நாட்டின் சமய ஐக்கியத்திற்கு ஒரு சான்று.

சொர்க்கமும் நரகமும் நம்முள்ளேதான்

யப்பான் நாடு. அந்த நாட்டின் பெரும் ஞானி ஒருவர் தியானத்தில் அமர்ந்திருந்தார். அவரைக் காண பட்டாடை அணிந்து மிகஉயர்ந்த குதிரை ஒன்றில் வீரன் ஒருவன் வந்தான். அவனது இடையில் நீண்ட வாள். அருகில் இருந்த மரம் ஒன்றில் குதிரையைக் கட்டிய பின்னர் அமைதியாக ஞானி முன் அமர்ந்தான். அவர் நிஷ்டை கலைந்தபோது தன் முன்னால் வீரன் ஒருவன் நிற்பதைக் கண்டார். வீரனே, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன் என்னதான் யோசித்தும், வேறு பலரிடம் கேட்டும் சொர்க்கமும் நரகமும் என்ன என்பதை அறிந்து கொள்ளமுடியவில்லை. சுவாமி, நாட்டு மக்கள் உங்களை பெரிய ஞானி. எல்லாம் தெரிந்தவர் என்று போற்றுகின்றார்கள். அதனால் உங்களுக்கு சில வேளை தெரிந்திருக்கலாம். தயவு செய்து சொர்க்கம் என்றால் என்ன? நரகம் என்றால் என்ன என்பதை எனக்கு விளக்குங்கள் என்று கேட்டான். இன்றுதான் உன்னை முதன் முதலாகப் பார்க்கின்றேன். நீ யார்? என்று ஞானி கேட்டார். அதற்கு அந்த வீரன் நான் இந்த நாட்டு மன்னரின் மெய்க்காவல் படையின் தலைவன் என்று இறுமாப்புடன் பதிலளித்தான். அதைக் கேட்ட ஞானி கடகடவென்று சிரித்தார். சிரிப்பினிடையே அவனைப் பார்த்து, உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரனிலும் மோசமான தோற்றத்தில் இருக்கிறாய்? போயும் போயும் உன்னையும் ஒரு மன்னன் மெய்க் காவலர் படைத் தலைவனாக நியமித்திருக்கிறானே என்று சொன்னார். அதனைக் கேட்டதும் வீரன் வெகுண்டெழுந்தான். இடையில் தொங்கிய நீண்ட வாளை உருவினான். கத்தி கூட உன்னிடம் இருக்கிறதா? அதைக் கொண்டு எனது தலையை சீவமுடியாது உன்னைப் போன்ற ஒரு ...... ஞானி தான் கூறவந்ததை முடிப்பதற்கு முன்னதாகவே அவரது கழுத்தை குறிவைத்தது வீரனின் வாள். ஆனால் ஞானியின் பரவச முகத்தில் எந்தவித பதற்றமும் இல்லை. அவர் சிரித்தபடியே உனது கேள்வி ஒன்றுக்கு பதில் கிடைத்து விட்டது என்றார். இப்பொழுதுதான் நீ நரகத்தின் கதவைத் திறந்திருக்கிறாய் என்றார் தொடர்ந்து. அதிர்ச்சி அடைந்த வீரன் பின் வாங்கிச் சென்று வாளை இடுப்பில் இருந்த அதன் உறையில் செருகினான். ஞானியின் காலில் விழுந்து வணங்கினான். இப்பொழுது நீ கேட்ட மற்ற கேள்விக்கு விடைகிடைத்து விட்டது. சொர்க்கத்தின் கதவை இப்பொழுது திறந்து விட்டாய் என்றார் ஞானி. வீரனின் முகத்தில் மந்தகாசம். சொர்க்கமும் நரகமும் நம்மிடந்தான் உள்ளன என்ற ஞானோதயம் பிறந்ததால் ஏற்பட்டிருந்தது அந்த மந்தகாசம். அவன் ஞானியை பல முறை வணங்கிய பின் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றான்.

கனடாவில் இந்துக்கள்

சமீபத்திய கணிப்புகள் உலகில் உள்ள இந்துக்களின் தொகை சுமார் 1 பில்லியன் என்று குறிப்பிட்டுள்ள. 2001ம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட சனத்தொகை கணிப்பின்படி கனடாவில் வாழும் இந்துக்களின் எண்ணிக்கை சுமார் 1 சதவீதம். அவர்களில் 73 சதவீதமானவர்கள்ஒண்டாரியோ மாகாணத்தில் வசிக்கின்றனர்.

அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
பகவன் முதற்றே உலகு.

திருக்குறள்

பிரதி பிம்பம்

கிருஷ்ணர் ஒரு தடவை துரியோதனனை அழைத்து, உலகம் முழுவதும் சுற்றித் திரிந்து, உண்மையாகவே நற்குணங்கள் நிரம்பிய மனிதர் ஒருவரைக் கண்டு பிடித்து அழைத்து வரும் படி கூறினார். அதற்கு ஒத்துக் கொண்ட துரியோதனன் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்தும் ஒரு மனிதர் கூட நல்ல குணம் படைத்தவராக அவன் கண்களுக்குத் தெரியவில்லை. எல்லோரும் தன்னைப் போலவே கொடுமனமும் பேராசையும் கொண்டவர்களாகத் தென்பட்டார்கள். அவன் கிரு‘ணரிடம் திரும்பி வந்தான். நீங்கள் கூறியது போல நல்ல மனிதர் ஒருவரைத் தேடித் திரிந்தேன். ஆனால் ஒருவர் கூட நல்லவராகத் தெரியவில்லை. எல்லோரும் இரக்கமற்றவர்களாகவும் கெட்ட குணம் படைத்தவர்களாகவும் காணப்படுகிறார்கள் என்று தெரிவித்தான். அவனை மாளிகைக்கு அனுப்பி விட்டு தருமரை கிரு‘ணர் அழைத்தார். தருமர் அவரது பெயருக்கு ஏற்ப எல்லோரையும் அரவணைத்து பேணுபவர். அதனால் பிரஜைகள் அனைவரும் அவரை நேசித்தார்கள். கிருஷ்ணர் அவரிடம், மன்னா, உலகம் முழுவதும் சுற்றித் திருந்தாவது உண்மையாகக் கெட்டவன் ஒருவனை அழைத்து வாருங்கள் என்று தெரிவித்தார். தர்மராஜாவம் கிருஷ்ணரது ஆணையைத் தலைமேல் கொண்டு புறப்பட்டுச் சென்றார். நீண்ட காலத்திற்குப் பின் திரும்பிய அவர் கிருஷ்ணரைப் பார்த்து, பெருமானே, உங்கள் கட்டளையை நிறைவேற்ற நான் தவறிவிட்டேன். தவறான வழிகளில் செலுத்தப்பட்டவர்கள். கண்மூடித்தனமாக மற்றவர்களைப் பின்பற்றியவர்களைப் பார்த்தேனே ஒழிய கெட்ட மனிதர் எவரையும் நான் காணவில்லை. எல்லோரும் நல்ல மனிதர்களே என்றார்.

தனது மகள் வீட்டிற்கு வந்த வயோதிபர் ஒருவர் சோபா ஒன்றில் படுத்து ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது பேரப்பிள்ளைகளில் ஒருவன் அவரது மீசையில் துர் நாற்றம் கொண்ட திரவத்தை பூசி விட்டான். விழித்து எழுந்த தாத்தா, அறை பொறுக்க முடியாத நாற்றம் அடிப்பதாகக் கூச்சல் போட்டார். இந்த வீட்டில் மனிதன் இருப்பானா என்றபடி வெளியே சென்றார். வீடு மட்டுமல்ல உலகம் கூட நாற்றம் அடிக்கிறது அப்போது அவர் சொன்னார். நாற்றம் தன்னில் இருந்துதான் வருகின்றது என்பதை அறியாத தாத்தாவுக்கு மற்றவர்களிடம் தான் இருந்து அது வருவதாகத் தோன்றியது. இதுதான் மனித இயல்பு. தன்னிடம் உள்ள குறைபாடுகளை மனிதன் உணர்வதில்லை. தன்னைப் போலவே மற்றவர்களும் என்று அவன் எண்ணிவிடுகின்றான்.

மேன்மை கொள் சைவ நீதி

மா.கணபதிப்பிள்ளை தமிழ்ப் பிரிவுத் தலைவர், றோயல் கல்லூரி, கொழும்பு

என்ன இல்லை இந்த திருநாட்டில் என்ற பாடல் வரிகள் சினிமாவில் இடம் பெற்று இன் றும் எம் காதில் ஒலிப்பவை. அந்த வரிகளை மாற்றி என்ன இல்லை எம்மதத்தில் என்று கேட்பது போல இருக்கிறது இக்கட்டுரை.

-ஆசிரியர்

உலகத்தில் உள்ள மதங்கள் எல்லாம் மனிதனை மனுசனாக்க வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டவை. மனிதன் நீசனாகினால் அவனுக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசம் இல்லை. மனிதனை மனுசனாக ஆக்கும் முயற்சியில் தோன்றிய மும்மதங் களில் சைவமும் ஒன்று. நாம் சைவ சமயத் தவர்களாகப் பிறந்ததை எண்ணிப் பெருமைப் பட வேண்டும். ஏனெனில் மூத்த உலக நாகரிகம் என்று சொல்லப்படும் மொகஞ் சதாரோ, ஹரப்பா நாகரிகத்தின் சொந்தக் காரர்கள் நாங்கள். இன்று உலகத்துக்கு நற் புத்தி போதிக்க நினைக்கும் ஐரோப்பியர்கட் கும், அமெரிக்கர்கட்கும் முன்பு எம்மதத்தவர் உலக நாகரிகத்தின் உச்சநிலையில் வாழ் ந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

சைவம் என்றால் ஒன்றுமில்லை என்று பொருள்படும். சைவர் தான் தொடக்கமும் முடிவும் என்று குறிப்பிடுவாரும் உண்டு. சய(-) வின் முடிவாகவும் சக(+)வின் தொடக்கமாகவும் அமைவது சைவர். இந்த எண்கணித வாய்ப் பாட்டு முறைதான் சைவமும். சைவம், மனிதன் ஒன்றுமில்லாதவன் என்ற நிலைக்கு எப்போது வருகின்றானோ அப்போதுதான் மனுசன் ஆகிறான் என்கிறது. செத்தாரைப் போலத்திரி என்ற வேதவாக்கின் உட்பொருள் அதுதான். இறைவன் எம்மைப் படைத்தமை எம் விதிவழிச் செயற்பாடாகும். முன்வினையின் அறுவடை இ ப்பிறவியில் நடைபெறுகிறது. நன்நிலத்தில் விதைத்தவன், நற்கருமங்கள் செய்தவன் இப் பிறவியில் நன்நிலையில் இருக்கின்றான். தீயராய், தீமையின் இருப்பிடமாய் இருந்தவன் இப்பிறவியில் துன்பத்தில் அழுந்துகிறான். இ தனாற்தான் கணிகன் பூங்குன்றனார் சொல்லும் போது தீதும் நன்றும் பிறர்தரவராது என்றார்,

இப்பிறவியின் செயல்கள் இனி எடுக்க இருக் கும் பிறவியின் விளைப்புலம். இங்கு நாம் விதைப்பதைத்தான் மறு பிறப்பில் நாம் அறுவடைசெய்ய இருக்கிறோம். இது பலரால் உணரப்படாதது. காயமே பொய் காற்றடைத் த பை என்றெல்லாம் சொல்லியாகிவிட்டது. காதற்ற ஊசியும் வராது காண் கடைவழிக் கே பட்டினத்தார் பாடி முடித்து விட்டார். ஆடி அடங்கும் வாழ்க்கை ஆறடி நிலம்தான் சொந் தமடா என்று சொல்லி முடிக்கப்பட்டு விட் டது. ஆனால் மனித நேயம் வளரவில்லை. இவ்வுலக மாய வாழ்வில் சிக்கி ஆசாபாசத் தில் அகப்பட்டு பண்பெனப்படுவதை பணத் துக்கு வாங்கலாம் என்று கங்கணம் கட்டிக் கொணடிருக்கும் இக்காலத்தில் இத்தகைய கருத்துகள் பிரயோசனமற்றவை போல் தெரியும்.

ஆழமாகச் சிந்தித்தால் மூடநம்பிக்கைகள் என் று நாம் புறக்கணித்துவிட்டுச் செல்லும் எமது பண்டைப் பெருமைகள் எண்ணற்றவை என்பதை அறிதல் வேண்டும். எமது பண்டைப் பெருமை- மகளை எமது சொந்தமான கண்டு பிடிப்புகளை இன்று மேற்கத்தையவன் விஞ்ஞானம் என்ற போர்வையில் சொல்லும் போது வான் முட்ட வாய் பிழந்து ஆகா, ஆகா என்று கேட் கிறோம். இதுவெல்லாம் எமது சைவநெறியில் பண்டுதொட்டு இருந்து வந்தது என்றால் எம் மவரே சிரிக்கின்ற கோரநிலையை அடைந்து விட்டோம். ஏனெனில் எம்மீது எமக்கு நம்பிக் கையில்லை. நாமா இப்படி இருந்தோம் என்று எண்ணமுடியாத அளவிற்கு பற்றில் வந்தது துன்பத்தில், பாழுங்கிணற்றின் அடியில் நின்று பார்க்கும் எமக்கு எல்லாமே வியப்புத்தான்.

இன்று மேற்கத்தைய வைத்தியம் என்றும் சொல்கிறார்கள். யாருக்கு யார் வைத்தியம் சொல்லித் தருகிறார்கள். சிவனுக்கு வைத் தியநாதன், வைத்தீஸ்வரன் என்று எல்லாம் பெயர்கள் உண்டு. முன்பு எல்லாமே இறைவன் பெயரால் சொல்லப்பட்டது, ஏனெனில் மதத்தின் பெயரால் சொல்லப்படாத எதிலும் நம்பிக்கை இல்லாத காலம். இன்று விஞ்ஞானத்தின் பெயரால் மேலைத்தேயங்கள் சொன்னாற்தான் ஏற்றுக் கொள்ளும் நிலையைப் போல் அன்று மதத்தின் பெயராற்றான் எதையும் செய்ய வேண்டும். தீராத பெரு நோய்கள் வந்தபோது சிறந்த மருத்துவ வசதியால் அவற்றைக் குணப் படுத்திய சித்த ஆயுள் வேதம் எமது சொந்த மருத்துவமாகும். இன்று எயிட்ஸ் என்று எண் ணற்ற புதுநோய்கள். அன்று ஒழுக்கம் உயிரினும் மேலாக ஓம்பப்பட்டதால் பண் புடையர் உலகில் பண்புக்குறைவால் ஏற்படும் நோய்கள் அருகியே இருந்தன. நாம் பல நூறு ஆண்டுகளாக ஓமத்திரவத்தை எமது குழந் தைகட்கு யாருமே சொல்லாமல் கொடுத்து வருகிறோம். அது மந்தம், அஜீரணம் போன் றவற்றைக் குறைத்தது. குழந்தைகளை மட் டுமல்ல பெரியவர்களையும் சுகமாக்கிவிட்டது. இந்த ஓமத்திரவத்திற்கு இப்போது அமெரிக்க சுகாதாரப் பணியகம் சிபார்சு செய்துள்ளது என் று விளம்பரம் செய்விக்கும் நிலையிலுள்ள கோரப் புத்திக்காரர்கள் நாங்கள். அமெரிக்கா கண்டத்தை அமெரிக்க வெஸ்புக்கியி கண்டு பிடிக்குமுன் அதிசிறந்த நாகரிகத்துடன் வாழ்ந் த மேன்மை மிகு சைவநீதியின் சொந்தக்காரர் கள் நாம் என்பதை மறந்து விட்டதால் எற்பட்ட நிலை.

விண்வெளிப்பரப்பில் செயற்கைக் கோள்களில் நின்று புவியின் நிலையை அவதானித்து எமக் கு எண்ணற்ற அறிவியில் கருத்துக்களை வழங் குகிறார்களாம் மேற்கத்தையவர்கள். கந்தப் புராணம் எங்கள் புராணச் சிறப்பிலக்கியம். அந் தகந்த புராணத்திலே சூரபத்மன் வருகிறான். .முருகன் சூரபத்மனோடு போராடும் போது பஞ் சலோகத்தினாலான கோள்களில் நின்று முருகனை எதிர்த்ததாக ஒரு காட்சி. அதுதான் இன்றைய செயற்கைக் கோள்கள். இச்செயற் கைக் கோள்களும் பஞ்சலோகத்தால் ஆனவைதான். எமது கந்த புராணத்தையும், கந்தரலாங்காரத்தையும், கந்தர் அனுபூதியையும் படிக்கத் தவறிய எமக்கு மேற்கத்தையவர் நாகரீகம் மேலாகத்தான் தெரியும். ஆதில் வியப்பில்லையே.

தமிழும் சைவமும் பிரிக்க முடியாதவை. ஆங் கிலமோகம் எம்மை ஆட்கொண்டு விட்டது. வீட்டிலே அன்னை தன் குழந்தையை ஆங் கிலமயப்படுத்த படாதபாடுபடுகிறாள். தன் சொந்தத்தமிழில் துாய கலாசாரத்தின் விழுமியத்தில் பண்டைப் பெருமை ஒன்று பாழ் பட்டுக் கிடக்கிறதே என்பதை எவருமே சிந் திக்கிறார்கள் இல்லை. அதிமேதாவித்தனத் தினாலும், அடங்காப்புத்தியாலும் அற்பன்கள் எல்லாம் தாமே அறிவாளி என்று எண்ணிப் பிதற்றும் காலம். பேராசிரியர்கள் என்போரும் சொற்களும், தெரியாத பதங்களுக்காகவுமே தான் பிரச்சனைப்படுகிறார்கள். மாதவியின் கற்பிலும் கண்ணகியின் கற்பிலும் புனிதத் தைத் தேடி அதில் உயர்வைக் காட்டிவிட் டால் போதுமென்ற பெருமை அவர்கட்கு. எமது சொந்த நூலான திருக்குறள் எம்மிடம் இருந்து அழிந்து போகின்றதே? யார் கவலைப் பட்டார்கள். ஔவை என்ற மூதாட்டியின் அருந்தமிழ்ப் பாடல்கள் எம் சின்னக் குழந் தைகளின் செல்ல நடையோடு நடைபயிலவில் லையே? யாருக்கு கவலை?

ஆலயங்கள் ஆ என்ற ஆத்மாவை லயிக்கச் செய்கின்ற இடங்கள் என்பதற்கு மாறாக ஆத் மாவை அலைக்கழிக்கும் இடங்களாக மாறிக் கொண்டுவருகின்றன. இவை தடுத்து நிறுத்தப் பட வேண்டும் என்பதை யார் சிந்திக்கிறார் கள்? கோவில்களுக்குப் போய் கொடிய பிணியகற்றும் நிலை இன்று இல்லை. கோவில்கள் கொடிய பிணிதேடும் நிலையங் களாக உருவாகி வருகிறது என்பதைக் கண் டும் கேட்பாரற்ற நிலை நாதியற்ற நிலையல் லவா?

விண்வெளி ஆராய்வுகள் நடைபெறுகின்றன. ஆம்ஸ்ரொங்கைப் பற்றிப் பாட்டுப்பாடி ஓடி விளையாடும் நிலையில் நாம் இருக்கின்றோம். எவ்வளவு கேவலம்? ஏமது இலக்கியங்களிலே புவியின் மேல் ஏழு உலகம், கீழ் ஏழு உலகம் என்று பதினான்கு உலகங்களையும் கட்டியாண்டவன் என்று பதினான்கு உலகம் பற்றிப் பேசப்படுகிறதே.

இன்று 9 கோள்களை மட்டும்தான் கண்டு பிடித்து இருக்கிறது விஞ்ஞானம். ஆனால் எமது பண்டைப் பெருமை மிகு மதமோ

34th பக்கம் பார்க்கவும்

முதல் வணக்கம்-விநாயக்...... மௌசும் மௌசும்

- மூஷிக வாகனம்

கிரௌஞ்சன் என்ற அரக்கன் மற்றவர்களை துன்புறுத்திய போது அவனது ஆணவத்தை அடக்கி தன் வாகனமாக ஆக்கிக் கொண்டார் விநாயகர் என்று புராணங்கள் கூறுகின்றன. மிகச் சிறிய பிராணியாகிய எலி உருவத்தில் மிகப் பெரியவரான பிள்ளையாரை எவ்வாறு தாங்கி எல்லா இடங்களுக்கும் செல்ல முடியும்? அவர் பெரிய உருவினராக இருந் தாலும் மிகவும் இலேசான தன்மை உடையவர் என்பதை அவரது இந்த வாகனம் விளக்குகின் றது. இறைவன் எங்கும் வியாபித்து இருப் பவன். பிரபஞ்சம் முழுவதிலும் அவன் நிறைந் து இருக்கின்றான். அதனை பிள்ளையாரது பிரமாண்டமான உருவம் எடுத்துக்காட்டுகின் றது. எங்கும் வியாபித்து இருக்கும் இறைவன் மிகச் சாமான்யமான ஆன்மாவிலும் இருக்கின் றார். எலி ஆங்கிலத்தில் மொவுஸ் என்று அழைக்கப்படுகின்றது. எலி சின்னஞ்சிறிதாக இருந்தாலும் எவரது கவனத்தையும் கவராது எங்கும் செல்ல வல்லது. அது இல்லாத இ டம் இல்லை. இந்த எலியைப் போன்றதே எமது மனமும். மனம் எங்கே உள்ளது என் பது தெரியாது. அது நிலை இல்லாது எல் லாப் பக்கமும் அலைந்து கொண்டிருப்பது. கணணியை இயக்கும் பொறியும் மௌஸ் என் றே அழைக்கப்படுகின்றது. அது கணணியைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் பலனை அடையச் செய்கின்றது. அந்த மௌஸ் நீங்கள் சொன் னபடி எல்லாம் செய்கின்றது. மனதில் விநாயகரை இருத்திக் கொண்டால் அவரது அருளால் நீங்கள் ஆன்மீக விழிப்புணர்ச்சியைப் பெறுவீர்கள் என்பதனை மூசிக வாகனமும் பிள் ளையார் அதன் மீது அமர்ந்திருப்பதும் சுட் டிக்காட்டுவதாகக் கொள்ளலாம் அல்லவா? மஞ்சள், சாணி, சந்தனம், அரிசி மா ஆகியவற் றால் மிக எளிதாக அங்க அவயவங்கள் எதுவும் இன்றி உருவாக்கி வழிபடப்படும் பிள் ளையார் இந்துக்கள் அனைவராலும் வணங் கப்படுகின்றார். வைஷ்ணவர்கள் அவரை தும் பிக்கை ஆழ்வார் என்று போற்றுகின்றனர். இ ந்துமதத்தில் மட்டுமல்லாது பௌத்தம் போன் ற மதங்களிலும் கூட பிள்ளையார் வழிபாடு இ ருக்கின்றது. உலகின் பல பாகங்களிலும் கூட பிள்ளையார் வழிபாடு இருந்துள்ளதை அங்கு காணப்படும் சிலைகள் உறுதிப்படுத்துகின்றன.

500 வருடத் தேர்

தமிழ் நாடு நெல்லையில் உள்ள ஸ்ரீநெல் லையப்பர் திருக்கோவில் தேர் 2004ம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி ஐநூறாவது ஆண்டாக ஓடியிருக்கிறது. நெல்லையப்பர்-காந்திமதி அம்மன் கோவிலில் ஐந்து தேர் கள். அவற்றில் மிகப் பெரியது சுவாமி நெல் லையப்பருக்கு உரியது. 1505ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இத்தேர் வருடா வருடம் இடைவிடாமல் உலா வந்திருக்கிறது. சுமார் 450 தொன் எடை கொண்ட இந்தத் தேரின் உயரம் 35 அடி. நீள-அகலம் 28 அடி. 6 சக்கரங்கள் கொண்ட இத்தேரின் அச்சு 150 ஆண்டுகளுக்கு முன்பு வரை மரத்தினால் ஆனதாக இருந்தது. அதன் பின்னர் லண் டனில் இருந்து வரவழைக்கப்பட்ட இரும்பு அச்சு பொருத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் தேரோட்டம் நடப்பதற்கு முன்னதாக தேரைச் சுத்தம் செய்வார்கள். தயிர், விளக் கெண்ணைய் கலந்து இந்தப் பணி மேற் கொள்ளப்படுகின்றது. அதனால்தான் ஐந்நூறு ஆண்டுகளானாலும் இந்தத் தேர் பொலிவு குன்றாமல் இருக்கின்றதாம். பல்லாயிரக்கணக் கானோர் வடங்களைப் பிடித்து தேரை இழுத் தாலும் அதனை ஒரே நாளில் இருப்புக்கு கொண்டு வருவது பெரும் சவாலாக இருக்கின் றது. எனினும் பக்தர்கள் கடந்த பல ஆண் டுகளாக இதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒரே ஒரு தடவை ஐந்து மணி நேரத்தில் தேர் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தது.

எல்லாம் இறைவனின் சித்தம்

மடம் பியூரி க்யூரி இரண்டு தடவைகள் நோபேல் பரிசு பெற்றவர். கதிரியக்கம் தொடர் பான அவரது ஆராய்ச்சியே பின்னர் வளர் ச்சியுற்று புற்று நோயைக் குணப்படுத்தும் வழிமுறைகளைக் கண்டறிவதற்கு உதவியது. வாழ்நாள் முழுவதையும் அறிவியல் ஆராய்ச் சிக்கு அர்பணித்த க்யூரி அம்மையார் விஞ் ஞானம், ஆராய்ச்சி, படிப்பு ஆகிய அத்தனை முயற்சிகளும் ஆண்டவா, உனது அழியாத இரகசியங்களை எனக்குக் காட்டு என நாம் வேண்டிக் கொள்கிற பிரார்த்தனைகள்தாம். பணிவோடு தன்னை வேண்டுவோருக்கு இ றைவன் தன் இரகசியங்களை வெளிப்படுத் துகிறான் என்று தெரிவித்திருக்கிறார்.

மேன்மை கொள் சைவ நீதி

பதினான்கு கோள்களைப் பற்றிச் சொல்லியுள் ளது.

ஆயுதங்களை உற்பத்தி செய்தலிலும் விற் பனை செய்தலிலும் அமைதியான நாடுகளில் யுத்தங்களைத் தூண்டி அணுவாயுத வாய்க் குள் உலகத்தைக் கொண்டு வந்திருக்கும் அமெரிக்கா உலகப் பொலிஸ்காரன் எனவும், சண்டித்தனக்காரர் எனவும் குறிப்பிட்டு எழுதி கேட்கும் நாடுகளாக நாங்கள் மாறியுள்ளோம். நாங்கள் சைவர்களாக இருந்தபோது உலகுக் கே போரின் வடிவங்களைக் கற்றுக் கொடுத் தவர்கள், போர்வியூகம், போர்முறை, போர்நீதி என்பன எல்லாம் எமக்குச் சொந்தமானவை. நாகக்கணை என்பது பற்றி மகாபாரதத்திலே பேசப்படுகிறது. குறிப்பிட்ட இலக்கை தாக்கும் அன்றேல் மீண்டும் வந்து ஏவிய இடத்தில் நிலை கொள்ளும். மிகச் சக்தி வாய்ந்தது. கர்ணன் என்ற மாவீரனிடம் அது இருந்தது. இந்த நாகக்கணையைத்தான் அமெரிக்கா இ ப்போது ஆராய்கின்றது. அதன் பாதி ஆய் வுதான் வெற்றியடைந்துள்ளது. குறிப்பிட்ட இ லக்கை நோக்கி ஏவின் இலக்குப்பிழைத்தால் தன் இலக்குப் பிழைத்ததை கணணி அறிவிக் கும் நிலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மீண் டும் விட்ட இடத்திற்கு திரும்பவரும் முறை ஆய்வு செய்யப்படுகின்றது. எமது தாய் நாடுகளில் இருந்து திருடிச் சென்ற சூத்திரங் கள் (குழசஅரடய) இன்று மேலைத் தேய நாகரிகத்தின் சொந்தங்களாக மாறிவருகின் றது. நாம் கையில் இருந்ததை விட்டுவிட்டு இ ப்போ எங்கிருந்தோ வரும் கண்டுபிடிப்புக்களை வாயாரப் புகழும் விற்பன்னர்களாகி விட்டோம்.

எமது மதங்கள் கட்டுப்பாட்டுடன் இருந்தன. சைவன் என்றால் நேர்மையானவன், நீதியா-னவன் ஒழுக்கமானவன், வஞ்சகமற்றவன், துன்பமில்லாதவன். இந்நிலமை இல்லாது போயிற்று. எம்மிடம் உள்ள தூயகுணங் களும் இல்லாது போகப் போக எமது நிலை படிப்படியாக சீர்குலைந்து செல்கிறது. இவை சீர்திருத்தப்பட வேண்டும். எமக்கு என்றொரு சிறந்த கலாசாரப்பண்பாடு விழுமியங்களைத் தந்த சைவநீதியை மீண்டும் பொலிவுறச் செய்தல் இன்றைய இளம் தலைமுறையி-னருக்கு விடப்பட்டிருக்கும் சவாலாகக் கொண்டு செயலாற்றுங்கள்.

(நன்றி:அகில இலங்கை இந்துமான்றத்தின் வெளியீடான இந்து ஒளி)

Hindu Religion

Hindus believe in reincarnation, or "life after life." (Results may occur in a following life.) Every individual soul returns to earth several times by rebirth to perform proper Karma to purify itself. Once purified by good karma, the soul reaches liberation with no-rebirth. Attachment, greed and lust leads to bad karma leading to grief and further suffering and rebirths to wash off those effects.

A goal of Hindus is to achieve Moksha, to be freed from the cycle of birth and death (when the "good" and the "bad" karmas balance.) or to reach Swarga, the abode of the Divine Soul or Paramatma [God] to serve at His feet

சூழ்நிலையின் வலிமை

கோபாலன் ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன். அவனிடம் அருமையான ஆட்டு மந்தை இருந்தது. அவன் ஒவ்வொரு நாளும் மேய்ச்சலுக்காக ஆட்டு மந்தையைக் காட்டுக்கு ஓட்டிச் செல்வான். பச்சைப் பசேல் என்ற புல்லையும் தழைகளையும் ஆடுகள் வயிறார மேய்ந்து கொண்டிருக்கும்போது கோபாலன் பக்கத்திலிருந்த ஆற்றின் கரையில் நன்றாக வளர்ந்து நின்ற மரத்தின் வளைந்த ஒரு கிளையில் அமர்ந்து புல்லாங்குழலை வாசிப்பது வழக்கம்.

ஒரு நாள் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தபோது, நதிக்கரையின் ஓரமாக ஒரு பெண் சிங்கம், இறந்து கிடப்பதைக் கோபாலன் பார்த்தான். அதன் அருகே அப்போதுதான் பிறந்த சிங்கக் குட்டி ஒன்று கிடப்பதையும் மரத்தின் மீதிருந்தபடியே பார்த்தான். வேகமாக இறங்கி சிங்கம் கிடந்த இடத்திற்கு ஓடினான். என்ன நடந்திருக்க வேண்டும் என்பதைப் பார்த்த கணத்திலேயே ஊகித்துக் கொண்டான். தாய்ச் சிங்கம் இந்தக் கரையை அடைவதற்காக மறு பக்கத்தில் இருந்து குதித்து நீந்தி வந்திருக்கிறது. பாவம். பூரண கர்பிணியாக இருந்ததால் அது குட்டியை ஈன்று விட்டு இறந்து விட்டிருக்கிறது என்று அறிந்து கொண்டான்.

பெற்ற தாயை இழந்து அனாதையாகக் கிடக்கும் சிங்கக் குட்டி கொள்ளை அழகோடு காணப்பட்டது. அதைத் தூக்கிக் கொண்டு ஆடுகளோடு வீடு வந்து சேர்ந்தான் கோபாலன். ஆட்டுப்பாலை அந்தச் சிங்கக் குட்டிக்குப் புகட்டினான். பின் ஆடுகளுடன் அதைக் கொண்டு போய்ச் சேர்த்தான். ஆடுகளுக்குக் கொடுப்பது போலவே பாலையும் புல்லையும் சிங்கக் குட்டிக்கும் கொடுத்து வளர்த்தான்.

அந்தச் சிங்கக் குட்டி நாளடைவில் ஆடுகளுக்கிடையில் ஓர் ஆடு போன்றே வளர்ந்து வந்தது. மற்ற ஆடுகளுடன் அதனையும் புல்வெளிக்கு ஓட்டிச் செல்வான் கோபாலன். ஆடுகளைப் போலவே புல் மேய்வது, ஆட்டுப்பாலைக் குடித்து ஆடுகளைப் போலவே கத்துவது, இவையெல்லாம் அந்தச் சிங்கக் குட்டிக்கு வழக்கமாயிற்று. ஒரு நாள் எப்போதும் போல் ஆடுகள் ஆற்றங்கரையில் புல் மேய்ந்து கொண்டிருந்தன. ஏதோ வேலையாக கோபாலன் தொலைவில் சென்றிருந்தான். அங்கே வந்த ஒரு பெரிய சிங்கம் அந்த ஆடுகளின் மீது பாய்ந்தது. ஆடுகள் பயந்து ஓலமிட்டவாறு நான்கு திசைகளிலும் ஓடின. சிங்கக் குட்டியும் ஆடுபோலக் கத்திக்கொண்டு தலைதெறிக்க ஓடியது. அந்தச் சிங்கக் குட்டியைக் கண்ட பெரிய சிங்கத்துக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. நடுங்கிக் கொண்டு ஓடிய சிங்கக் குட்டி மீது பாய்ந்து அதன் கழுத்தை கௌவிப் பிடித்துக் கொண்டது. மாட்டிக் கொண்ட சிங்கக் குட்டி ஆட்டுக் குட்டி போல் பரிதாபமாகக் கத்திற்று. என்னைப் போல நீயும் சிங்கமாயிற்றே? ஏன் இப்படி ஆடுமாதிரி கத்துகிறாய்? என்று கேட்டது பெரிய சிங்கம். இந்த வார்த்தையைக் கேட்ட சிங்கக் குட்டிக்கு ஒன்றும் புரியவில்லை. தான் ஒரு ஆடு என்று அது உறுதியாக நம்பியது. குட்டிச் சிங்கம் ஓடாமல் இருக்க வேண்டி பெரிய சிங்கம் அதனைக் கெட்டியாகப் பிடித்து ஆற்றங்கரைக்கு இழுத்துச் சென்றது. தண்ணீர் அருகே கொண்டு போய் இதோ இந்தத் தண்ணீரில் தெரியும் உன் பிம்பத்தைக் கவனமாகப் பார்! நாம் இரண்டு பேரும் ஒரே மாதிரியாகத் தானே இருக்கிறோம் என்று கேட்டது பெரிய சிங்கம். நீரில் தெரியும் தன் பிம்பத்தையும் ெரிய சிங்கத்தையும் மாறி மாறிப் பார்த்தது குட்டிச் சிங்கம். அதனுடைய உருவம் சற்றுச் சிறிதாக இருந்தது. பெரிய சிங்கத்தின் உருவம் பெரிதாக இருந்தது. அவ்வளவுதான் வித்தியாசம். ஆச்சரியத்தோடு பெரிய சிங்கத்தை ஏறெடுத்துப் பார்த்தது சிங்கக் குட்டி. பெரிய சிங்கம் பெரிதாக காடு அதிர ஒருமுறை கர்ஜித்துவிட்டு குட்டியைப் பார்த்து, நான் கர்ஜித்தது மாதிரி நீயும் கர்ஜனை செய் என்றது. சிங்கக்குட்டி குரல் எழுப்பிற்று. ஆனால் பாவம். அது ஆடு கத்துவது போலத்தான் இருந்தது. மீண்டும் ஒரு முறை முயன்றது. அப்பொழுதும் ஆடு போலத்தான் கத்த முடிந்தது. எனினும் மீண்டும் மீண்டும் அது முயலவே சிறிது சிறிதாக அதன் ஒலி மாறியது. நிஜமாகவே கர்ஜிக்கத் தொடங்கியது. தன் கர்ஜனையைக் கேட்டதும் அதற்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. பெரிய சிங்கத்துடன் சேர்ந்து கர்ஜனை செய்தது. முழுமையான சிங்கமாக அதனை ஆக்க விரும்பியது பெரிய சிங்கம். உடனே பக்கத்தில் பாய்ந்து ஓடிய மானை அடித்துக் கொன்றது. பிறகு அதன் உடலில் இருந்து பிய்த்தெடுத்த ஒரு துண்டு மாமிசத்தைச் சிங்கக் குட்டியின் வாயில் திணித்தது. இதுநாள் வரை புல்லையே மேய்ந்து வந்த சிங்கக் குட்டிக்கு மானின் இறைச்சி மிகுந்த சுவை உடையதாக இருந்தது. இறைச்சியை நன்கு சுவைத்து உண்டு விட்டு மகிழ்ச்சிப் பெருக்கால் கர்ஜனை செய்தது. மிகப் பெரிய சிங்கத்தோடு காட்டிற்குள் பாய்ந்தோடி மறைந்தது.

தன்னுடைய உண்மை இயல்பை மறந்திருந்த இந்த சிங்கக் குட்டியைப் போலத்தான் நாமெல்லாம் இருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் ஒரு தெய்வக்கனலின் சிறு பொறி. இந்த உண்மையை நாம் உணரவில்லை. பெரிய ஞானி ஒருவர் நம்மிடையே தோன்றி நம் உண்மை நிலையை சான்றுகளோடு விளக்கி நிலைநாட்டும் போதுதான் இதை உணர்கின்றோம். பின்பே நம்மிடம் உள்ள குறைகள் நீங்கி பெருநிலை அடைகிறோம். சிங்கக் குட்டி ஆட்டுக்குட்டி போல் இருந்தது போன்று நாம் இருக்கக் கூடாது. நம் சிங்கத் தன்மையில் ஒன்றுபட ஒவ்வொரு நாளும் முயன்று வரவேண்டும்.

(நன்றி: ஸ்ரீ இராமகிருஷ்ணர் நீதிக்கதைகள்)

Where is GOD?

Once an inquisitive devotee asked a realized saint, " Bhagavan, what is the form of God? Where does he live and where can I find him?"

The saint said, "God is everywhere and is all pervading. He is blissful, omniscient and immortal and He is your own self". The devotee asked, "If it is so, why do I not perceive and have an experience of Him?" The saint replied, "As the God is all pervading, He is within your own mind as well but your mind is not in Him. Your mind is engrossed in the world."

The saint in many ways tried to make him understand the existence of God but the devotee could not comprehend and realize God. The saint then told him, "Go to Haridwar, there in Ganga, there is a fish of a strange colour and it can speak in the voice of human beings. The fish will give you an appropriate answer to your question". The inquisitive devotee bowed to the saint, touched his feet and started on his way to Haridwar. There he sat down in a corner and began to wait for the arrival of the strange fish. Whenever he saw any fish he repeated his question and asked where God lived and how could he see Him?

After sometime the strange fish came and asked the devotee "where from have you come?" The devotee replied, "A saint asked me to see you and I want to know where does God live and how can I see Him?" The fish said to him, "I am thirsty for the last seven days. So tell me where I can get water from." On listening to the words of the fish, the devotee laughed and said, "Oh foolish one, water is above you, below you, it is on your right, on your left and there is water on all you sides".

When the devotee spoke like this, the fish became serious and said, "Oh, you innocent devotee. You are also foolish like me. God whom you are searching is above you, below you, on your right, on your left, and in brief he is on all your sides. The devotee was a bit satisfied and said, "If so, why am I unable to see the blissful God and why am I so miserable?" The fish said, "The same is my question. If water is on all my sides why is my thirst not quenched?

Turn over to next page

Colour & Win



For children age eight and under. Best three entries will be published in the next issue along with the winners' pictures. Remember to send in the entries before Feb 15th 2005 with name ,address and phone number to our mail box address.

Ohm Colour Competition
OHM Hindu Spiritual Magazine Publications
P.Box 63610
1571 Sandhurst Circle
Scarborough, Ontario
M1V 5K2.

Where is GOD? .....

The devotee knew the construction of the body of the fish and knew that so long as the fish swam straight with its face upward, no water can enter its mouth. To quench its thirst the fish has to swim upside down. If the construction of the body of the fish is not been like this, water can enter its body freely and it will die. So the devotee advised the fish to take a turn upside down to quench its thirst.

The fish then said to the devotee, "As we have to take a turn to quench our thirst, you should also take a turn to see God. Turn away from the desires to see God. In other words, when you turn the flow of the thoughts of your mind from the world to the blissful omniscient God, then all your sorrows will come to an end. The devotee did accordingly and realized his real Self.

-Sri Ramakrishna

God is Beautiful

O God beautiful! O God beautiful!
In the forest, Thou art green,
In the mountain, Thou art high,
In the river, Thou art restless,
In the ocean, Thou art grave!
To the serviceful, Thou art service,
To the lover, Thou art love,
To the sorrowful, Thou art sympathy,
To the yogi, Thou art bliss!
O God beautiful! O God beautiful!
At Thy feet, O I do bow!

-Guru Nanak

பொதுவான எதிரிக்கு முன்னால்

ஒரு சிங்கமும் ஒரு புலியும் ஒரே நேரத்தில் தாங்கள் வழக்கமாக நீர் அருந்தும் இடத்திற்கு சென்றன. இரண்டுக்கும் நல்ல தாகம். யார் முதலில் தண்ணீரைக் குடிப்பது என்ற போட்டி அவற்றினிடையே ஆரம்பமானதால் இரண்டும் மூர்க்கத்தனமாக சண்டையிட்டன. திடீரென்று வானம் இருண்டது. அதனைக் கண்ட இரு மிருகங்களும் தங்களது சண்டையை நிறுத்தி வானத்தைப் பார்த்தன. அங்கு ஏராளமான பினந்தின்னிக் கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. தங்களில் யார் முதலில் கொல்லப்படுவாரோ அவரது உடலைக் கொத்தித் தின்பதற்காக அவை காத்திருக்கின்றன என்பது இரு மிருகங்களுக்கும் புலனாகவே சண்டையை நிறுத்தி அவ்விடத்தை விட்டகன்றன.

ஜோதிடம் ஒரு கைகாட்டி -கபிலன்

அஞ்சுவது யாதொன்றுமில்லை
அஞ்ச வருவதுமில்லை

என்று அறைகூவியவர் மூன்று முதலிகள் என்று அழைக்கப்படும் நாயன் மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர். இறைவன் அடியார்களை எதுவும் எவரும் ஒன்றும் செய்யமுடியாது. அதனால் அச்சம் என்பது எவருக்கும் ஏற்பட வேண்டியதில்லை என்று கூறிய அவர் ஞானசம்பந்தரை மதுரைக் குச் செல்ல வேண்டாம் என்று தடுக்கிறார். சமணர்களின் சித்திரவதைக் கு இலக்கானவர் திருநாவுக்கரசர். வயது முதிர்ந்த நேரத்தில் இளம் பாலகனாகிய சம்பந்தரை அவர் சந்திக்கின்றார். சம்பந்தர் இறை அருள் பெற்றவர் என்பது அவருக்கு நன்கு தெரிந்ததே. எனினும் சமணர்பால் தான் பெற்ற கசப்பான அனுபவங்கள் அவரை சம்பந்தரை எச்சரிக்க வைக்கின்றன. தடுக்கின்றன. அவருக்குப் பதிலாகத் தான் செல்வதாகச் சொல்ல வைக்கின்றன. கிரகங்களின் நிலை சம்பந்தருக்கு சாதகமாக இ ல்லை என்பதையும் எடுத்துக் காட்ட வைக்கின்றன. தனது நெஞ்சில் இ றைவன் வீற்றிருப்பதால் கிரகங்கள் தன்னை எதுவும் செய்யா என்று கூறி கோளறு பதிகங்களைப் பாடுகின்றார் சம்பந்தர். திருநாவுக்கரசர் எச்சரித் தது போலவே சம்பந்தர் மதுரையில் பல ஆபத்துக்களைச் சந்திக்கின் றார். தங்கியிருந்த மடத்திற்கு அவர் நித்திரையில் இருந்த போது சமணர் கள் தீ வைக்கின்றார்கள். இறைவனை வணங்கித் துதிபாடியே சம்பந் தர் தான் தப்புவது மட்டுமல்லாமல் மடத்தில் இருந்த ஏனையோரையும் தப்பச் செய்கின்றார். தங்களுக்கும் சம்பந்தருக்கும் இடையிலான போட் டியில் தோற்றவர் கழு ஏற வேண்டும் என்ற நிபந்தனையை சமணர்கள் முன் வைக்கின்றார்கள். கழுவேற வேண்டிய ஆபத்தையும் கூட சம்பந்தர் நோக்கியதை இது எடுத்துக்காட்டுகின்றது. அப்பர் எச்சரித்தது போலவே சம்பந்தர் ஆபத்துக்களை எதிர்கொண்டதையும் இறைவனைத் தொழுது அதனால் அவர் அவற்றில் இருந்து மீண்டதையும் நாம் காண்கின்றோம்.

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்ற பழமொழி ஒரு விடயத் தை எமக்கு நினைவூட்டுகிறது. அர்ச்சுனன் மீது கர்ணன் நாகாஸ்திரம் ஏவ வேண்டும் என்பது விதி. நாகாஸ்திரத்தின் தாக்கத்திற்கு எவராலும் ஈடு கொடுக் க முடியாது. மரணம் நிச்சயம். கண்ணனை சரணடைந்தவன் அர்ச்சுனன். அதனால் அவனைக் காக்க வேண்டிய பொறுப்பு கண்ணனுக்கு இருந்தது. கர் ணன் நாகாஸ்திரம் எய்த போது அர்ச்சுனன் ஏறியிருந்த தேரின் சில்லுகள் நிலத்தில் சற்று புதையும்படி செய்கின்றார் அவர். அதனால் நேராகச் சென் ற நாகாஸ்திரம் அர்ச்சுனனின் முடியைத் தாக்கி அதனை தள்ளிவிடுவதுடன் நின்று விட்டது. அர்ச்சுனன் காப்பாற்றப்படுகின்றான். சம்பந்தர் தனக்கு வரப் போகும் ஆபத்தை நன்கு தெரிந்தே எதிர்கொண்டார். இறை பக்தி தன்னைக் காக்கும் என்று உணர்ந்தவர் அவர். அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. அர் ச்சுனனுக்கு கண்ணன் மீது ஆழ்ந்த பக்தி. அது அவனைக் காக்கின்றது.

மனிதனுக்கு எற்படக் கூடிய நன்மை தீமைகளை கோடிட்டுக்காட்டுவது சோதிடம். மழை, வெய்யிலில் இருந்து குடை நம்மைக் காப்பாற்றுகின் றது. குடையின் கீழ் இருந்தாலும் மழை நீர் நம்மீது சிறிதளவாவது படத்தான் செய்கின்றது. வெய்யிலின் உ'ணம் எம்மீது உறைக்கத்தான் செய்கின்றது. மழை வரும் நல்ல வெயில் காயும் என்பதை அறிந்தே நாம் அவற்றில் இருந்து தப்புவதற்காக குடையைக் கொண்டு செல்கின் றோம். தக்க தருணத்தில் அது எம்மைக்காப்பாற்றுகின்றது. இந்த குடை போன்று வாழ்க்கைத் துணையாக அமைந்திருப்பது இறை அருள்.

எழுத்தாளர் பாலகுமாரன்: ஜோசியம் பார்ப்பது நல்ல விஜயம். எதிர் காலம் பற்றி மெல்லிய ஒரு வெளிச்சம் தெரிகிறபோது நம்மால் நடு நிலையில் இருக்க முடியும். நிதானமாய் செயல்பட முடியும். ஜோசியர் கள் சொல்லும் எச்சரிக்கையை உள்வாங்கி சங்கடமான நேரங்களில் சரியானபடி சிந்தித்து செயலாற்ற முடியும்.

ஜோசியம் ஒரு வழிகாட்டி, ஜோசியம் ஒரு கைகாட்டி. ஆனால், தொடர்ந்து நீங்கள்தான் நடக்க வேண்டும். உங்கள் பாரத்தை நீங்கள் தான் சுமக்க வேண்டும். தினமும் விநாயகர் வணக்கம் செய்து காரிய சித்திமாலை சொல்லுங்க என்ற ஒரு பழக்கத்தை ஒரு ஜோசியர் ஏற்படுத்தி விட்டால் அந்த காரிய சித்திமாலை நெஞ்சோடு ஒட்டி, மனதில் பதிந்து முக்கியமான நேரங்களில் அதைச் சொல்லி பழக்கம் ஏற்பட்டு அப்படிச் சொல்வதால் நிதானம் ஏற்பட்டு சங்கடமான நேரங்களை எதிர்கொண்டு விபரீதமாக்காமல் வாழ்க்கையை அசிங்கப்படுத்திக் கொள்ளாமல் அமைதியாக இருக்கிற பழக்கம் ஏற்பட்டு இருக்கிறது. இல்லையெனில் சிறிய சந்தோசத்திற்கு அதிகம் ஆடவும், சிறிய துக்கங்களுக்கு பெரிதும் வருத்தப்படவும் பழக் கமாகிவிடும். வாழ்க்கையினுடைய எல்லா விடயங்களும் பழக்கத்தை ஒட் டித்தான் வருகின்றன. ஜோசியம் உங்களை நல்ல பழக்க வழக்கத்திற்கு அனுப்புகிற ஒரு கலை. உங்களை நிதானமாக்குகின்ற,தெளிவாக்குகின்ற ஒரு கலை இயல்.

ஜோசியம் மருந்து போன்று உபயோகப்படுத்தப்படும் தேன். விரலால் தொட் டு வாயில் விட்டுக் கொள்ளலாமே தவிர அண்ணாந்து மடக்மடக்கென்று குடித்து முகமெல்லாம் ஈசிக் கொள்ளக் கூடாது. அப்போது தேனின் சுவை மறந்து போய் அதன் பிசுபிசுப்பே உடம்பு முழுவதும் பரவியிருக்கும். ஜே ாஸ்யம் ஒரு கூர்மையான ஆயுதம். ஏன்ன செய்வது. எப்படி உபயோகிப் பது என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்கிறார்.

பஞ்சபுராணம்.....

அத்துயர் அதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனம் அதன் இடை இபம் ஆகி
அக்குறமகளுடன் அச் சிறு முருகனை
அக்கணம் மணம் அருள் பெருமாளே.

அருணகிரிநாதர் பாடிய விநாயகர் துதிப் பாடல். கைநிறைய இருக்கும் பழம், அப்பம், அவல், பொரி ஆகியவவற்றை உண்பவர் ஆனைமுகக் கடவுள். அவருடைய திருவடிகளை வணங்கி, படிக்கும் அடியவர் களுடைய மனத்தில் இருப்பவரே என்று கூறினால், அவர்களுடைய பாவங் கள் விரைவில் போகும். ஊமத்த மலரையும் பிறைச் சந்திரனையும் சூடிய சிவபெருமானுக்குத் திருமகன், மலைபோன்ற திரண்ட புயங்களை உடையவர், மதம் சொரியும் யானை முகத்தை உடையவர், மத்தளம் போன்ற வயிற்றை உடையவர், உத்தமியாகிய உமையின் புதல்வரானவர் முத்தமிழையும் மேரு மலையில் எழுதிய தலைவனே, முப்புரங்களையும் எரித்த சிவபெருமான் இருந்த ரதத்தின் அச்சை உடைத்த அதிக வீரம் உடையவனே. வள்ளியிடம் கொண்ட காதலால், முருகன் தினைப்புனத் தில் துன்பப்பட்ட போது அதனை நீக்குவதற்கு யானையாக வந்து வள் ளியுடன் அவரை ஒன்று சேர்த்து வைத்த தலைவனே. உம்மை தேன் சொரியும் மலர்களினால் அர்ச்சித்து வணங்குகின்றேன்.

இந்துமதம் வளர்த்த தமிழ்

திருமதி. வசந்தா நடராசன் B.A

உலகம் தோன்றிய காலமுதல் எத்தனையோ விந்தைகளும், மாற்றங்களும் அன்றாடம் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இவற்றுள் நமது எண்ணங்களுக்கும், பகுத்தறிவிற்கும் புலப்படாத பல நிகழ்வுகளுக்கு யார் கர்த்தா? என்ற கேள்வி ஒவ்வொருவர் எண்ணத்திலும் எழுவதும், புதுமை, அற்புதம் என்ற விடைக்குள் அடங்குவதும் அன்றாடம் நிகழும் விந்தைகளுக்கு விடையாக அமைந்துவிடுகின்றன.

காலந் தவறாத பருவங்கள், விண்ணிலே எழும் சந்திர, சூரியனின் உதய அஸ்தமனம், ஓங்கி எழுந்து காணப்படும் மலைகள், அலையெறியும் கடல், உரிய காலத்தில் பூத்து, பின் சருகாகும் மலர்களின் கால நிர்ணயம், பெருகி வரும் வெள்ளம், குமுறி எழும் பூகம்பம், தங்களைத் தாங்களே பாதுகாத்து, வாழ்க்கை முறைகளை அமைக்கும் ஐந்தறிவுள்ள இனங்களின் வாழ்வு முறை என இவற்றையெல்லாம் சிந்திக்கும்பொழுது, இவை எப்படி உருவாகின? இவற்றைப் படைத்து கால நிர்ணயப்படி நிரைப்படுத்திச் செல்பவர் யார் என்ற கேள்விகள் சுற்றியுள்ள உலகத்தையும், படைப்புக்களையும் பார்க்கும்போது ஒவ்வொருவர் மனதிலும் எழும்.

இவ்வாறான கேள்விகள் நமக்குள் எழும்பொழுது, நமக்கும் மேற்பட்ட பொருள் ஒன்று இருப்பதை ஆறறிவு படைத்த மனித இனம் உணரத் தலைப்பட்டதில் வியப்பில்லை. அதனுடைய ஆற்றலைக் கருத்திற் கொண்டு, அதனைப் பரம்பொருள், கடவுள், தெய்வம், இறைவன், முழுமுதற் பொருள் என்று பல பெயர்களை இட்டு, அதற்குப் பல வடிவங்களை அமைத்துப் போற்றி வந்துள்ளனர். உருவ வழிபாட்டு முறை சமய உணர்வை மக்களிடையே ஏற்படுத்த உறுதுணையாக இருக்கின்றது. உலகிலே உள்ள மக்கள் அனைவரிடமும் சமய உணர்வு காணப்படுகின்றது. ஒரு மனிதன் பின்பற்றும் சமயம் என்பது, அவனது அடிப்படைப் பண்பாடாகக் காணப்படுகின்றது. ஆறறிவு படைத்த மனிதன் ஆண்டவனைத் தேடி நாடுவதே சமயம் என்று அழைக்கப்படுகின்றது. இறைவனை நோக்கி ஏங்கும் உள்ளப் பண்பு, ஏங்கி நிற்கும் உள்ளத்திற்கு இறைவன் காட்டும் அருட்பாலிப்பு இவையே எல்லாச் சமயங்களின் சாரமாகவும் காணப்படுகின்றன. ஆண்டவனது அருளைப் பெற வேண்டும் என்ற தாபம் மக்கள் மனதிலே, அடிப்படையில் அமைந்ததொரு குணமாகக் காணப்படுகின்றது. உலகிலே தோன்றிய எல்லாச் சமயங்களும் அன்பையும் அறத்தையும் வலியுறுத்தி, ஒற்றுமையை நிலைநாட்டவே ஏற்பட்டன. இந்தவகையிலேயே இந்து சமயத்தின் நெறிமுறைகளும் அமைந்து, மக்களை நெறிப்படுத்த உதவின. இந்து தர்மத்தின் ஆதிவரலாற்றை ஆராய்ந்தால், சிவவழிபாடு பழமை வாய்ந்த வழிபாடாகக் காணப்பட்டுள்ளது. மொகஞ்சதாரோ, உறராப்பா போன்ற இடங்களின் புதைபொருள் ஆராய்ச்சிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட முடிவுகளின் மூலம், சிந்து வெளி நாகரீக காலத்திலேயே சிவனைப் போன்ற உருவங்களை மக்கள் வழிபட்டுள்ளமை புலப்படும்.

சிவ வழிபாட்டின் சிறப்பு அம்சம் யாதெனில், சிவனை உருவமாகவும் வழிபடலாம், அருவமாகவும் வழிபடலாம். இவற்றிற்கும் மேலாக லிங்க வழிபாடு சிவனுக்கே உரிய தனி வழிபாடாகச் சிறப்புப் பெற்று விளங்குவதைக் காணலாம். சிவன் என்றால், நன்மை, வீடுபேறு, மங்கலம், செம்மை எனப் பல பொருள் கொள்ள முடியும். சிவன் என்றால் சீவனுக்கு ஆதாரமானவன் என்றும் அர்த்தம் கொள்ள முடியும். இந்து தர்மத்தில் பன்னெடுங்காலமாக உருவ வழிபாடு காணப்படவில்லை என்பதற்கு லிங்க வடிவமாக இறைவனை வழிபட்டமை ஒரு சான்றாகக் காணப்படுகின்றது. ஆதிசங்கரர் வகுத்த சமய அடிப்படையில் சிவன், சக்தி, முருகன், கணபதி, சூரியன் போன்ற தெய்வ வணக்கமுறைகளும், சிறுதெய்வ வழிபாடுகளும், தேவதை வணக்கமுறைகளும் இந்து சமயத்துள் அடக்கமாகக் காணப்படுகின்றன.

சமயம் என்பது ஒரு குறிப்பிட்ட மனித சமுதாயத்தின் தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட ஒரு கட்டுக்கோப்பு என வேறோர் வகையில் விளக்கம் அளிக்கலாம். சமயத்திலே, தத்துவங்களும், சடங்குகளும், விதிகளும், வழிபாட்டு முறைகளும், வாழ்கை நெறிகளும், சமுதாய ஒழுக்கங்களும் அங்கங்களாகிவிடுகின்றன. இக் கூறுகளை அந்தந்தச் சமுதாயத்தினர் அறிந்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவ்வாறான அறிந்துகொள்ளும் முறைக்கு ஒரு தகவல் தொடர்புடனான அணுகுமுறை அத்தியாவசியமாகின்றது. இந்த அணுமுறைக்கு மொழி ஆதாரமாகக் காணப்படுகின்றது.

இந்தவகையிலே, தமிழ்மொழியின் வளர்ச்சியில் இந்து சமயத்தின் பங்கு அளப்பரியது. ஆவ்வாறே இந்துசமயக் கருத்துக்களை மக்களிடையே நிலைநாட்டுவதில் மிகச் சக்தி வாய்ந்த சாதனமாக நீண்டகாலமாகத் தமிழ்மொழி பயன்பட்டு வந்துள்ளது. தமிழ் வளர இந்துமதம் எவ்வாறு கைகொடுத்தது என்று எண்ணுவது இனிமை தருவதாகும். தமிழைத் தெய்வத் தமிழ் என்றும், இறைவனுக்கு உகந்த மொழி என்றும் கூறுவர். ஏனைய மொழிகளைப்போல் அறிவியல் மொழியாகவோ, காதல் மொழியாகவோ, வாணிப மொழியாகவோ, இலக்கிய மொழியாகவோ மட்டும் உணரப்படாமல் அனைத்தையும் உள்ளடக்கிய இறையுணர்வு மொழியாகவும் விளங்கும் பேறு பெற்றது தமிழ் மொழி. இவ்வாறான செந்தமிழை, இறைமொழியாக்கிய பெருமை இந்து சமயத்தையே சாரும்.

தொல்காப்பியம், அகத்தியம், அகநானூறு, புறநானூறு, ஐம்பெரும் காப்பியங்கள், கம்ப இராமாயணம், வில்லிபுத்தூரர் மகாபாரதம், திருக்குறள், திருவாசகம், ஆழ்வார் பாசுரங்கள், தேவாரம், போன்ற இலக்கியங்களையும், கவிதைகளையும் உற்றுநோக்கின், இவை யாவும் இந்துசமயத்தின் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் மூலக்கருத்தாகக் கொண்டு காணப்படுவது அவதானிக்கத் தக்கது இந்துசமயத்தின் ஆழ்ந்த கருத்துக்கள் பரவிக்கிடந்த சமஸ்கிருதமொழியைக் கற்றோர் பிற்காலத்தில் அருகியே காணப்பட்டனர். பின்னாளில் இந் நூல்களின் கருத்துக்களைக் கருவாகக் கொண்ட தமிழ் இலக்கியங்கள் தோன்றி இக்குறையை நிவர்த்திசெய்தன. உலகப்பொதுமறை எனப்போற்றப்படும் திருக்குறள், வேதங்களின் சாரத்தைப் பிழிந்தெடுத்துக் கொடுத்துள்ளதோடு, பகவத்கீதையின் தத்துவங்களையும் குறுகத் தறித்த குறளாக்கி மக்கள் மனங்களில் நிலைபெற்றுள்ளது.

தமிழின் வேதாகமத்தின் கருவூலமாகத் திகழ்வது திருமூலருடைய திருமந்திரம். இதனை முதல் நூலாகக் கொண்டே பதினொரு திருமுறைகளும், பதின்நான்கு சித்தாந்த நூல்களும் எழுந்தன என்பர். தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற மூவகைச் சிறப்பையும் தன்னகத்தே கொண்ட தீந்தமிழ் நூலாகத் திருமந்திரம் விளங்குகின்றது. திருமந்திரத்தின்மூலம் இந்து தர்மக் கருத்துக்கள் இலகுவாக மக்களை அடைய வித்திட்ட பெருமை, அழகு தமிழுக்கே உரியதெனின் மிகையாகாது. மெய்ப்பொருள் அறிவு பெற்ற திருமூலரின் அழகு தமிழ்ப் பாடல்களிலே தொனிக்கும் வாழ்வின் யதார்த்தங்களை கற்றவர் மட்டுமல்ல மற்றவரும்அறியக்கூடிய சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன்று ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே (திருமந்திரம் - 153)

வாழ்வு நிலையற்றது என்பதை உணர்த்தும் இத் தமிழ்ப்பாடல் இந்து தர்மத்தின் பற்றறுக்கும் நிலையின் உச்சத்தை மிக எளிமையான தமிழிலே படம் பிடித்துக் காட்டியுள்ளது. இவ்வாறே அன்பே சிவம் என்ற அற்புதக் கருத்தை அறிவுடையார் எவ்வாறு கருதுவர், அறிவிலார் எவ்வாறு கருதுவர் என்பதை

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரம் அறிகிலார் (திருமந்திரம் - 270)

என்ற ஆழ்ந்த கருத்தை வெளிப்படுத்தக் கையாண்ட தமிழ் மொழியால, இந்து தர்மத்தின் அடிநாதமான அன்பே சிவம் என்ற கருத்து இலகுவில்க்களைச் சென்றடைய வித்திட்டவர் திருமூலர்.

அடுத்த இதழில் தொடரும்


வீடு வாங்க, விற்க...
KARU'S
ROYAL TEAM
கரு கந்தையா
வீடு விற்பனை முகவர்
16 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்...
Karu's Royal Team
THE CHAIRMAN'S CLUB
National Award Winner
Top 1% in All Canada
Karu Kandiah FRI. CRES
Associate Broker
Chandran Sornalingam*
Siva Kandiah*
Charles Deva*
Malini Muhunthan*
Ranjan Francis*
Naren Sambasivam*
Jay Emmanuel*
Sri Ganeshan Thambaiah*
Raj Ariyam*
Kumar Varatharajah*
Asok Santhiralingam*
Arnand Murthy*
Ramanan Ramachandran*
ROYAL LEPAGE
Connect Realty
Tel: 416-284-5555
880 Ellesmere Road. Suite 203(Kennedy & Ellesmere), Scarborough, ON.
* Sales Rep.